நம் வழி வேளாண்மை

பருவம் 33 ஏப்ரல் – ஜூன் 2024 இதழ் 1

தேசிய அளவில் கால்நடை மேய்ச்சல் நிலம், பொது இடங்களை பாதுகாப்போருக்கு விருதுகள்

நாள் : 28.03.2024 இடம் : மதுரை

இயற்கைவழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம் வழி வேளாண்மை

பருவம் 33 ஏப்ரல் – ஜூன் 2024 இதழ் 1

ஆசிரியர்
பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்

பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலைபேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி
Prof. Anil Gupta,
Honey Bee,
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org

பயின்ற தயக்கம் தடையை மீறுமா

உயிரின ஆய்வாளர்கள் சுறாமீனை வைத்து ஒரு சோதனை நடத்தினர். இதன்படி ஒரு குளத்தில் சுறா மீனை விட்டு சிறுமீன்குஞ்சுகளையும் விட்டனர். சிறிது நேரத்திற்குள் சுறாமீன் மீன்குஞ்சுகளை பிடித்து விழுங்கிவிட்டது.

உயிரினஆய்வாளர்கள் ஒரு பைபர்கிளாஸ் தொட்டியை இரண்டாகப் பிரித்து அதாவது நடுவில் கண்ணாடித் தடுப்பை வைத்து ஒரு பகுதியில் சுறாமீனையும் மறு பகுதியில் பல மீன்குஞ்சுகளையும் விட்டனர். சுறாமீன் மீன் குஞ்சுகளைப் பார்த்து அதை பிடிக்க முயலும்போது தடுப்புச் சுவர் கண்ணாடியினால் மோதி போக முடியாமல் திணறும். சுமார் 2 டஜன் முறை பிடிக்கத் தாவிபார்த்தும் முடியாமல் மோதுவதின் வேகம் குறைந்து விட்டது.

உயிரினஆய்வாளர்கள் பின்னர் தடுப்புச் சுவரை எடுத்து விட மீன்குஞ்சுகள் எளிதாக சுறா மீனைச் சுற்றி வர ஆரம்பித்தன. ஆனால் தற்சமயம் சுறாமீன் மீன்குஞ்சுகளைப் பார்த்து விழுங்குவதை விட்டு விட்டது. இது எதை உணர்த்துகிறது ?

பயின்ற பழைய பயிற்சியினால் தயக்கம் காட்டியது. இந்த நிலைதான் அதாவது பயின்ற தயக்கம் தடையாய் உள்ளது. இதை மீளுவதே நமது குறிக்கோளன்றோ?

மனிதர்களின் கண்டுபிடிக்கும் திறன் இருந்தும் இது சிறைப்பட்டுள்ளது. இதிலிருந்து மீளுவதே நம் குறிக்கோள் என இந்த சோதனையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். எனவே புது முயற்சிகளுக்கு தொடர்ந்து இடம் தர வேண்டும். பின்னர் இதற்கு வழி தானே கிட்டும்.



நன்றி : தேனீ அக்டோபர் – டிசம்பர் – 2023

கால்நடை மேய்ச்சல் நிலம், பொது இடங்களை பாதுகாத்தல் கருத்தரங்கம்

(அட்டைப்படம்)

28.03.2024 அன்று மதுரை புல்லூத்திலுள்ள தானம் மக்கள் கல்வி நிலையத்தில் ஒரு நாள் கால்நடை மேய்ச்சல் நிலம், பொது இடங்களை பாதுகாத்தல் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பல்வேறு மாநிலங்களிலிருந்து தொண்டு நிறுவன களப்பணியாளர்கள், கிடைக்காரர்கள், மக்கள் குழு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் பொது இடங்கள், மேய்ச்சல் நிலங்களை சிறந்த முறையில் பாதுகாத்துப் பாராமரித்த 10 நபர்கள்/ குழுக்களுக்கு பரிசுத்தொகை தலா ரூபாய் 10,000 மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன. இக்கருத்தரங்கில் நடைபெற்ற கலந்துரையாடல் மூலம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டன.

1. கிராம அளவில் மேய்ச்சல் நிலம், பொது இடங்கள், கண்மாய் நீர்நிலைகள் போன்றன ஒரு பதிவேட்டில் பட்டியிலிடப்பட வேண்டும்.

2. தேசிய அளவில் மேய்ச்சல் நிலக்கொள்கை (உள்ளடங்கியது) உருவாக்கப்படவேண்டும். இதில் கால்நடை மேய்ச்சல்காரர்கள் விரும்பும் பாரம்பரிய புல்வகை, தாவரங்கள், மூலிகைச்செடிகள் மற்றும் மரவகைகள், நடப்படவேண்டும். பொது இடங்களில் சீமைக்கருவேலை மற்றும் உண்ணிச்செடி என்ற லண்டானா அகற்றப்படவேண்டும்.

4. கண்மாய், மற்றும் நீர்நிலைப் பகுதிகள் வறண்ட காலத்தில் மேய்ச்சலுக்குப் பயன்படுகின்றன. எனவே இந்த பகுதியையும் மேய்ச்சல் நிலக்காடுகளாக சேர்க்கப்பட வேண்டும்.

5.தேர்வு செய்யப்பட்ட மேய்ச்சல் நிலங்களை உலக ஐ.நா.சபை அங்கீகரிக்கப்பட்ட பாரம்பரிய பாதுகாப்பு நினைவு இடங்களாக பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

இக்கூட்டத்திற்கு சேவா சங்க தலைவர் திரு. ஜெயபாஸ்கரன் தலைமை தாங்கினார். தானம் அறக்கட்டளை நிர்வாக இயக்குநர் திரு. ம.ப. வாசிமலை, மேய்ச்சல்நில குழுக்கள், நபர்களுக்கு பரிசுகள் வழங்கினார். திருமதி தானம்மாள், குமரகுரு வேளாண்மைக்கல்லூரி, கோயம்புத்தூர் நன்றியுரை கூறினார். இக்கருத்தரங்கு நடத்துவதற்கு மத்திய அரசின் கால்நடைத்துறை மாநில அரசின் கால்நடைத்துறை நிதியுதவி செய்தது.

கணபதிபட் தயாரித்த மரம் ஏறும் பைக்

பாரம்பரியமாக மரம் ஏறும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய இளைய தலைமுறை இத்தொழிலில் ஆர்வம் காட்டாமல் வேறு வேலைகளுக்கு செல்கின்றனர். ஏனெனில் இது ஒரு கடினமான வேலை மற்றும் இதில் ஆபத்தும் உள்ளது.

கர்நாடகா மாநிலம் தக்சினகன்னடா மாவட்டத்தில் திரு. கணபதிபட் என்பவர் பாக்கு மரங்களில் எளிமையாக ஏறுவதற்கு ஒரு பைக் தயார் செய்து உள்ளார். இதனுடைய எடை 2 கிலோ ஆகும். 80 கிலோ எடை வரை உள்ள ஒருவர் இதில் அமர்ந்து ஓட்டி செல்லாம். இது பெட்ரோல் மூலம் இயங்கும் 3 ஸ்ட்ரோக் இன்ஜின் கொண்டது. இதில் ஹேண்ட்பார், பிரேக் போன்றவை உள்ளன. இந்த பைக்கில் பாதுகாப்பு அம்சங்களான இருக்கை பெல்ட், ஹைட்ராலிஸ் பிரேக், இன்ஜின் சாக்அப்சர்வர் அமைப்புகள் உள்ளன. இதில் சிலிப்பாகி விபத்து நேர வாய்ப்பு இல்லை. இந்த பைக் மூலம் ஒரு நாளைக்கு 40 மரங்கள் ஏறி இறங்கலாம். ஒரு லிட்டர் பெட்ரோலில் 80 மரங்களில் ஏறலாம். இவருடைய தோட்டத்தில் 10,000 பாக்கு மரங்கள் உள்ளன. இவர் இக்கருவியை வடிவமைக்க பல வருடங்கள் சோதனைகள் செய்து வெற்றி பெற்றுள்ளார். இவருடைய மகளும் இக்கருவியை பயன்படுத்தி வருகிறார். இவருடைய வீடியோவைப் பார்த்து பல நபர்கள் இக்கருவியை வடிவமைத்து தர கேட்டுள்ளார்கள்.

கே. கணபதிபட், சஜிபமுன்னூர் தாலுகா
பன்டவால் மாவட்டம், கர்நாடகா.
செல் : 9632774159

செல்வராஜின் கால்நடை வைத்தியம்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி கொண்டையான் குப்பம் கிராமத்தில், திரு.செல்வராஜ் வசித்து வருகிறார். இவருக்கு வயது 52 ஆகிறது. இவரது கால்நடை வைத்யம் பின்வருமாறு:

சினைபிடிக்க

கைப்பிடி செம்மண்ணை (1/2 லிட்டர்) நீரில் கரைத்து பின்பு வடிகட்ட வேண்டும். வடிகட்டிய நீருடன் வேப்ப எண்ணெய் (50 மி.லி) அளவு கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். (சினைக்கு காளை சேர்த்த உடனே கொடுக்க வேண்டும்).

வயிறு ஜீரண கோளாறுக்கு

நாரத்தைத்தழை ஒரு கைப்பிடி அளவு எடுத்து அதனுடன் இஞ்சி 50 கிராம் சேர்த்து நன்கு இடித்து பின்பு பெருங்காயத்தூள் 50 கிராம் சேர்த்து இரு வேளையாக பிரித்து உள்ளே கொடுக்க வேண்டும்.

கழிச்சலுக்கு

மருதம்பட்டை ஒரு கையளவு எடுத்து புழுங்கள் அரிசி 1/4 கிலோ ஊற வைத்து இரண்டையும் இடித்து இரண்டு வேளையாக பிரித்து கொடுக்கவும்.

பூச்சிக்கடிக்கு

கருடன் கிழங்கு, நல்லெண்ணெயில் ஊற வைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

நாய்க்கடிக்கு

நாவல் இலை, நாயுருவி இலை, ஒவ்வொன்றும் ஒரு கைப்பிடி அளவு சேர்த்து அரைத்து வெல்லத்தில் பிசைந்து 3 நாட்கள் உள்ளே கொடுக்கவும்.

எம். செல்வராஜ், அம்மன் கோவில் தெரு, கொண்டையான் குப்பம், வந்தவாசிவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் –604406

குப்பனின் கால்நடை வைத்தியம்

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி தென்னாங்கூர் கிராமத்தில், குப்பன் வசித்து வருகிறார். இவருக்கு வயது 63 ஆகிறது. பத்து வயதிலிருந்து இன்று வரை கால்நடை மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். 50 வருட அனுபவம். மூன்றாயிரத்திற்கு மேற்பட்ட ஆடு மாடுகளுக்கு வைத்தியம் செய்துள்ளார். முன்பு 100க்கு மேற்பட்ட ஆடுகள் வைத்திருந்தார். தற்பொழுது 20 ஆடுகள், 5 மாடுகள் வைத்துள்ளார். இவர் பின்பற்றும் வைத்ய முறைகள் பின்வருமாறு :

எலும்பு முறிவுக்கு

வெல்லம் தேவையான அளவு, சுண்ணாம்பு தேவையான அளவு, இவை இரண்டையும் சேர்த்து எலும்பு முறிவு உள்ள இடத்தில் வைத்து பருத்தி துணியால் சுற்றி கட்டி விட வேண்டும். அல்லது கேழ்வரகு கூழ் எலும்பு முறிவு உள்ள இடத்தில் வைத்து துணியால் கட்டி விட வேண்டும்.

மெலிந்த மாடு உடல் பெருக்க

கடலை எண்ணெய் 200 மி.லி., மருதம்பட்டை 100 கிராம், புழுங்கல் அரிசி 200 கிராம் சேர்த்து இடித்து மூன்று நாட்கள் உள்ளே கொடுக்க வேண்டும்.

தோல் நோய்க்கு

சிறுகுறிஞ்சான் 100 கிராம், பசும்பால் 1/2 லிட்டர் இரண்டையும் அரைத்து வாரம் ஒரு முறை உள்ளே கொடுக்க வேண்டும்

விஷக்கடிக்கு

சிறியாநங்கை இரண்டு கைப்பிடி எடுத்து இடித்து உள்ளே கொடுத்தால் விஷக்கடி நீங்கும்.

குடற்புழு நீக்கத்திற்கு

சோற்றுக்கற்றாழை ஒரு மடல் என மூன்று நாட்கள் தொடர்ந்து தின்னக்கொடுக்க வேண்டும்.

அம்மை நோய்க்கு

பூண்டு, வெற்றிலை, மிளகு, வெல்லம் சேர்த்து நல்லெண்ணெய் சேர்த்து இடித்து 100 கிராம் கலவை உள்ளே கொடுக்க வேண்டும்.

அடிபட்ட காயத்திற்கு

நிலக்கடம்பை இலை, மஞ்சள், கற்பூரம் அரைத்து காயத்தில் வைக்க வேண்டும்.

காய்ச்சலுக்கு

உதியம்பட்டை, வேப்பமரப்பட்டை, கொருகலிக்கா, மரப்பட்டை, வில்வப்பட்டை சம அளவு எடுத்து மற்றும் பிரண்டை ஒரு கைப்பிடி சேர்த்து தண்ணீர் விட்டு நன்கு இடித்த நீரை இரண்டு நாள் புளிக்க வைத்து கல்உப்பு 50 கிராம் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். மாட்டிற்கு அரை லிட்டர் அளவு, ஆட்டிற்கு 100 மில்லி லிட்டர் அளவு ஒரு நாள் மட்டும் தர வேண்டும்.

கழிச்சலுக்கு

ஊமத்தை இலைச்சாறு (10 இலையிலிருந்து பிழிந்தது) மற்றும் தயிர் 1/4 லிட்டர் கலந்து உள்ளே கொடுக்கவும். மாட்டிற்கு 1/2 லிட்டர், ஆட்டிற்கு 1/4 லிட்டர் அளவு, ஒரு நாளைக்கு ஒரு வேளை என இரண்டு நாள் கொடுக்கவும்.

நாய்க்கடிக்கு

தும்பைத்தழை 100 கிராம் இடித்து சாறு பிழிந்து நல்லெண்ணெய் 50 மி.லியில் கலந்து உள்ளே கொடுக்கவும். இரண்டு நாட்கள் ஒரு வேளை என கொடுக்கவும். இது வரை 30க்கும் மேற்பட்ட மாடுகளை குணப்படுத்தி உள்ளார்.

விஷக்கடிக்கு

கருடன் கிழங்கு 100 கிராம் இடிக்கவும் மற்றும் வால் மிளகு 50 கிராம் வறுத்து இடித்து இரண்டையும் கலந்து ஒரு வேளை என இரண்டு நாட்கள் கொடுக்கவும்.

ஆடு அம்மை நோய்க்கு

வெள்ளை கல்லு எடுத்து ஆட்டின் காதை கீறி விடவும். பின்பு அச்சு கர்ணைமுள் எடுத்து மற்றொரு ஆட்டின் மடியில் கீறி அதன் பாலை எடுத்து காதில் கீறிய இடத்தில் வைக்க வேண்டும்.

காயத்திற்கு

நிலக்கடம்பைத்தழை தேவையான அளவு அரைத்து அடிபட்ட காயத்தில் வைக்க வேண்டும்.

புழு வைத்த புண்ணுக்கு

எருக்கம் பாலை புழுவைத்த புண்ணில் இட வேண்டும்.

சினைபிடிக்க

ஆனைமுலாம் தழை 100 கிராம் மற்றும் செம்பருத்தி தழை 100 கிராம் அரைத்து தண்ணீரில் கலந்து ஒரு நாள் மட்டும் உள்ளே கொடுக்கவும்

ஆட்டிற்கு தாள்கட்டு வந்தால்

சூடு கோல் வைத்து தாள் கட்டு உள்ள இடத்தில் சூடு போட வேண்டும். பின்பு வேப்பெண்ணெயை தடவி வர காயம் ஆறி விடும்.

வயிறு உப்பிசத்திற்கு

ஆப்பசோடா மாவு ஒரு சிட்டிகை லெஹர் சோடாவுடன் கலந்து உள்ளே கொடுக்கவும்.

மெலிந்த உடல் பெருக்க

பிரண்டை தேவையான அளவு கல் உப்பு 50 கிராம் ஆகிய இரண்டையும் இடித்து ஒரு லிட்டர் நீர் கலந்து மூன்று நாட்கள் ஊறவைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

மலக்கட்டு ஏற்பட்டால்

பச்சை தண்ணீர் ஆசனவாயில் உள்ளே தேவையான அளவு ஊற்ற வேண்டும் (எனிமா கொடுத்தல்).

சுவாச நோய்க்கு

தும்பைச்செடி இடித்து சாறு பிழிந்து இரண்டு மூக்கு துவாரத்திலும் 10 சொட்டு அளவு என மூன்று நாட்கள் ஒரு வேளை விடவும்.

அதிக பால் கறக்க

கம்பு மாவு ஒரு கிலோ, பூண்டு 100 கிராம், இஞ்சி 100 கிராம், எள்ளுப்புண்ணாக்கு 250 கிராம் (இடித்து சலித்த தூள்), வெல்லம் 500 கிராம், வெங்காயம் 100 கிராம், வெற்றிலை 100 கிராம், இவை அனைத்தையும் இடித்து ஒன்று சேர்க்க வேண்டும். இதனை 3 ஆக பிரித்து 3 நாட்கள் உள்ளே கொடுக்க வேண்டும்.

இளங்கொடி விழாமல் இருந்தால்

வெண்டைத்தழை ஒரு கிலோ அல்லது எள்ளுத்தழை அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

கர்ப்பப்பை வெளியே தள்ளுதல்

வெளியே தள்ளிய கர்ப்பப்பையை நன்கு உப்பு கலந்த நீரால் சுத்தம் செய்து பின்பு உள்ளே மெதுவாக தள்ள வேண்டும். பின்பு தையல் போட வேண்டும்.

விஷச்செடி தின்றுவிட்டால்

உப்பு 100 கிராம், புளி 1/4 கிலோ இரண்டையும் நீரில் கரைத்து உள்ளே கொடுக்கவும். மாட்டிற்கு 1/2 லிட்டர், ஆட்டிற்கு 100 மி.லி தரவும் .

கண்ணில் அடிப்பட்டால்

கல்யாண முருங்கை பால் மூன்று சொட்டை மூன்று நாட்கள் கண்ணில் விடவும்.

கன்று கழிச்சலுக்கு

ஊமத்தை இலைச்சாறு (5 இலை எண்ணிக்கை), 1/2 டம்ளர் நீரில் கலந்து உள்ளே கொடுக்கவும். பெரிய கன்றுக்கு 1/2 லிட்டர் 2 நாட்கள் மட்டும் கொடுக்க வேண்டும்.

காம்பில் பால் வராமல் இருந்தால்

பூண்டு 100 கிராம், வெற்றிலை 10 எண்ணிக்கை, இடித்து உள்ளே கொடுக்கலாம். மூன்று நாட்கள் கொடுக்க வேண்டும்.

இரத்தம் கலந்த பால் வந்தால்

கறிவேப்பிலை கைப்பிடி அளவு, இடித்து எலுமிச்சை பழம் சாறு கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

மடி வீக்கத்திற்கு

செம்மண், கல்உப்பு தேவையான அளவு அரைத்து மடியில் நீர் கலந்து போடலாம். குணமாகும் வரை போடவும்.

கொம்பு முறிவுக்கு

வெல்லம், சுண்ணாம்பு கலந்து கொம்பில் வைத்து துணியில் கட்டவும்.

இரை எடுக்காமலிருந்தால்

சோற்றுக்கற்றாழை ஒரு கிலோ (முள் நீக்கவும்), வெல்லம் 1/2 கிலோ சேர்த்து உள்ளே ஒரு நாள் மட்டும் கொடுக்க வேண்டும்.

குப்பன்

எண்: 212, செல்லியம்மன் கோவில் தெரு

தென்னாங்கூர், வந்தவாசி வட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் –604407

செல் : 9751980768

உடலில் இரத்த விருத்திக்கு

ஸ்ரீதர் சேலம், தில்லைநகரில் வசித்து வருகிறார். இவர் பி.எஸ்.சி வரை படித்துள்ளார். இவருக்கு வயது 60 ஆகிறது. இவருடைய வைத்யம் பின்வருமாறு: கருவேப்பிள்ளை 10, நாட்டு வெல்லம் 5 கிராம், மிளகு 6, சீரகம் 1 கிராம். இதை மையாக அரைத்து தினசரி காலை மாலை 2 வேளை சாப்பிட வேண்டும். நோய் காலங்களில் 3 வேளை எடுத்து கொள்ளவும். அரைப்பு மிக முக்கியம் அம்மியில் அரைக்கவும். இந்த வைத்தியத்தை 20 ஆண்டுகளாக கடைபிடித்து வருகிறார். எண்ணற்ற நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

ஸ்ரீதர், 74/26 தில்லைநகர்

4 வது தெரு, சேலம் – 636001

கேசவனின் கால்நடை வைத்யம்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், மீசநல்லூர் கிராமத்தில் கேசவன் வசித்து வருகிறார். இவருக்கு வயது 45. இவர் 14 வயதிலிருந்து வைத்யம் செய்கிறார். இதுவரை சுமார் 500 கால்நடைகளுக்கு மேலாக வைத்தியம் செய்துள்ளார். இவருடைய வைத்ய முறைகள் பின்வருமாறு:

காய்ச்சலுக்கு

நெல்லிக்காய் 10, எலுமிச்சை 2, சோற்றுக்கற்றாழை இரண்டு மடல் இவை அனைத்தையும் அரைத்து உள்ளே கொடுக்கவும். தக்காளி 1/4, கரு வெற்றிலை 4ஐ இரண்டு நாட்கள் கொடுக்கவும்.

சினைபிடிக்க



பேத்திகாய்

பெரு நெல்லித்தழை ஒரு கைப்பிடி, பேத்திகாய் 2 கைப்பிடி(அத்திமரம் போன்று காய் காய்க்கும்), (எலுமிச்சை 5 குங்குமத்தில் கலந்து) இவை அனைத்தையும் இடித்து வெல்லம் 1/4 கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

கழிச்சலுக்கு

மயிறு மாணிக்கம் ஒரு கைப்பிடி இடித்து எலுமிச்சை 1/4 பழம் ஊறுகாய் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

வெளிப்புற உண்ணிகளுக்கு

பழைய என்ஜின் ஆயில் கொண்டு உண்ணிகள் உள்ள இடத்தில் தேய்த்து ஒரு மணி நேரம் மாட்டை வெயிலில் கட்டவும். பின்பு தும்பைச்செடியை சேர்த்து குளிப்பாட்டினால் உண்ணிகள் கொட்டிவிடும்.

மடிநோய்க்கு

சோற்றுக்கற்றாழை 3 மடல், சுண்ணாம்பு 50 கிராம், மஞ்சள் 100 கிராம் தூள், இவை அனைத்தும் அரைத்து மடியில் தடவவும்.

கண்ணில் அடிபட்டால்

முருங்கை பால், நாவுரி, கல்உப்பு, முருங்கைத்தழை இவை அனைத்தையும் கசக்கி, கண்ணில் 5 சொட்டுகள் விடவும்,

புண்கள்

ஒட்டரை, எலுமிச்சை மாவு மற்றும் சுண்ணாம்பு 5 கிராம் எடுத்து இரண்டையும் குழைத்து புண்ணில் ஒரு நாள் மட்டும் வைக்க வேண்டும்.

இ. கேசவன், பிள்ளையார் கோவில் தெரு
மீசநல்லூர், வந்தவாசி வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம், செல் : 9710042169

பொன்னுச்சாமியின் கால்நடை வைத்யம்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தாலுகா, தெள்ளாறு கிராமத்தில் திரு. பொன்னுசாமி (வயது 70) வசித்து வருகிறார்.

வாயு, உப்பிசத்திற்கு

பாம்பு கலக்காய்த்தழை ஒரு கைப்பிடி, நன்சமன்சான் தழை, தும்பைத்தழை, அனைத்தையும் சம அளவு எடுத்து இடித்து நீரில் (1/4 லிட்டர்) கலந்து ஒரு நாள் ஒரு வேளை மட்டும் உள்ளே கொடுக்கவும்.

வலிகளுக்கு (காக்காவலிப்பு)

பெரிய குறிஞ்சான் ஒரு கைப்பிடி, காட்டுவாதழை ஒரு கைப்பிடி, பெருங்காயம் 10 கிராம் அனைத்தையும் இடித்து ஒரு நாள் ஒரு வேளை மட்டும் உள்ளே கொடுக்கவும். பீர்க்கங்காய் இலை இடித்து 2 கைப்பிடி ஒரு லிட்டர் நீரில் கலந்து உள்ளே கொடுக்கவும். ஒரு நாள் மட்டும்.

இளங்கொடி விழாமல் இருத்தல்

உருப்பாத்தி தழை இரண்டு கைப்பிடி அளவு எடுத்து இடித்து நீரில் கலந்து உள்ளே கொடுக்கவும்.

விஷகடிக்கு

பாம்புகலக்காய் தழை, தும்பைத்தழை ஒரு கைப்பிடி அளவு எடுத்து இடித்து உள்ளே கொடுக்கவும். காதை கீறி விடவும்.

எலும்பு முறிவுக்கு

உளுந்து 1/4, கலிப்பாக்கு 4 எண்ணிக்கை, கோழி முட்டை 1 அனைத்தையும் அரைத்து மூங்கில் தப்பை வைத்து துணியால் கட்டவும்.

கொம்பு முறிவுக்கு

சுண்ணாம்பு, வெல்லம் கலந்து கொம்பு முறிந்த இடத்தில் துணியால் கட்டவும்.

பொன்னுசாமி, 1111, அரசமரத்து தெரு, கீளன்டை காலனி, தெள்ளாறு, வந்தவாசி தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம்
செல் : 9994371825

கிருஷ்ணனின் கால்நடை மூலிகை வைத்யம்

திருவண்ணாமலை மாவட்டத்தில், வந்தவாசி வட்டம், வசித்து வரும் கிருஷ்ணன் வயது 70. இவர் 45 வருடமாக கால்நடை முலிகை வைத்யம் செய்து வருகிறார். இவர் பல கிராமங்களுக்குச் சென்று வைத்யம் செய்து வருகிறார். இவர் 4,000 கால்நடைகளுக்கு மேலாக வைத்யம் செய்துள்ளார். தற்பொழுது 6 மாடுகள் மற்றும் 3 கன்றுகுட்டிகள் வைத்துள்ளார். இவருடைய வைத்யம் பின்வருமாறு:

மூலிகைச்சத்து உருண்டை தயாரித்தல்

தும்பை, கொழிஞ்சன்தழை, சீமை காட்டுவாதழை, நன்சமன்சான் தழை, ஆவாரம் தழை, தரணி தழை, அனைத்தும் ஒரு கைப்பிடி சம அளவு எடுத்து இடித்து கொடுக்கவும்.

தொண்டை அடைப்பான் நோய்க்கு

மூலிகைச்சத்து உருண்டை 100 கிராம் எடுத்து 500

மி.லி. நீரை சேர்க்கவும். பின்பு 300 மி.லி. தேங்காய் எண்ணெய் சேர்த்து உள்ளே கொடுக்கவும். ஒரு நாள் மட்டும் ஒரு வேளை கொடுக்க வேண்டும்.

கழிச்சலுக்கு

மூலிகைச்சத்து உருண்டை 100 கிராம் மற்றும் புழுங்கல் அரிசி மாவு 500 கிராம் கலந்து உள்ளே ஒரு வேளை கொடுத்தால் போதுமானது.

மலச்சிக்கலுக்கு

மூலிகை மசால் உருண்டை 100 கிராம் மற்றும் வெற்றிலை 10 எண்ணிக்கை, வெல்லம் 1/4 கிலோ, உப்பு 50 கிராம் இவை அனைத்தையும் இடித்து ஒரு வேளை உள்ளே கொடுத்தால் போதுமானது.

குடற்புழு நீக்கம்

பிரண்டை ஒரு கைப்பிடி அளவு, அவஞ்ச தழை 100 கிராம், உப்பு 50 கிராம் மூன்றையும் இடித்து ஒரு வேளை போட்டால் போதுமானது.

வெளிப்புற ஒட்டுண்ணிகள்

தும்பை 100 கிராம், நாய்த்துளசி 100 கிராம் சேர்த்து இடித்து உப்பு 10 கிராம் இவை அனைத்தையும் 200 மில்லி லிட்டர் நீரில் கரைத்து உண்ணி உள்ள இடத்தில் தேய்த்து விடவும். இதனை வாரம் ஒரு முறை செய்ய வேண்டும்.

சுவாச சம்பந்தப்பட்ட நோய்

தும்பை இலை 50 கிராம், தேங்காய் எண்ணெய் 50 கிராம், உப்பு 5 கிராம். இவை அனைத்தையும் இடித்து சாறு எடுத்து 5 மி.லி அளவு இரு மூக்கிலும் விடலாம். இரண்டு நாட்கள் விட வேண்டும்.

காய்ச்சலுக்கு

மூலிகைச்சத்து உருண்டை ஒரு வேளை கொடுத்தால் காய்ச்சல் குறையும்.

கோமாரி நோய்க்கு

மூலிகைச்சத்து உருண்டை 3 நாட்கள் கொடுக்க வேண்டும்.

மடிநோய்க்கு

மூலிகைச்சத்து உருண்டை 100 கிராம் மற்றும் 500 மி.லி. பசும் பால் (ஒரு மாட்டு பால்) கலந்து இரண்டு நாள் உள்ளே கொடுக்க வேண்டும்.

மடிமேல் பூச்சு தயாரிப்பு : எலுமிச்சை சாறு, சுண்ணாம்பு, இரண்டையும் சேர்த்து மடியில் தடவலாம்.

சினைப்பிடிக்காமைக்கு

சோற்றுக்கற்றாழை 1/2 கிலோ அரைத்து உள்ளே மூன்று நாள் கொடுக்க வேண்டும். அல்லது மலைவேம்பு 100 கிராம் அரைத்து 500 மி.லி. நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

இளங்கொடி விழாமலிருந்தால்

உருபாத்தி இலை 200 கிராம் எடுத்து இடித்து 500 மி.லி. நீரில் கலந்து 3 நாட்கள் உள்ளே கொடுக்க வேண்டும்.

விஷக்கடிக்கு

மூலிகை உருண்டை 100 கிராம் எடுத்து அதனுடன் கருப்பு வெற்றிலை 5 எண்ணிக்கை சேர்த்துஅரைத்து 2 நாட்கள் உள்ளே கொடுக்க வேண்டும்.

கண்ணில் நீர் வழிந்தால்

புழுங்கல் அரிசி 10 எண்ணிக்கை, மிளகு 3 எண்ணிக்கை நம் வாயில் போட்டு மென்று மாட்டின் கண்ணில் துப்ப வேண்டும்.

கண்ணில் அடிப்பட்டால்

புழுங்கல் அரிசி மாவு 10 கிராம், மிளகுத்தூள் 3 கிராம், தேங்காய் எண்ணெய் 3 மி.லி அனைத்தையும் சேர்த்து கண்ணில் தடவ வேண்டும்.

புண்களுக்கு

மூலிகை மாசால் உருண்டை 100 கிராம் எடுத்து மையாக அரைத்து தேங்காய் எண்ணெயில் 100 மி.லி கலந்து காயத்தின் மேல் பூச வேண்டும்.

உடல் பெருக்க

மூலிகை சத்துக்கலவை 100 கிராம், சீரகம் 50 கிராம், மிளகு 25 கிராம், வெந்தயம் 50 கிராம், தேங்காய் எண்ணெய் 300 மி.லி சேர்த்து உள்ளே இதனை வாரம் ஒரு முறை 3 வாரம் கொடுக்க வேண்டும்.

எலும்பு முறிவுக்கு

முட்டை 2, உளுந்த மாவு 50 கிராம் பொடியாக்கி குழைத்து துணியில் நனைத்து மூங்கில் தப்பை வைத்து கட்டவும். (மசால் சத்து உருண்டை உள்ளே கொடுக்க வேண்டும்),

கொம்பு முறிவுக்கு

மூலிகைச்சத்து உருண்டை அரைத்து கொம்பு முறிந்த இடத்தில் வைத்து கட்டவும்.

கொம்பு கழட்டி கொண்டு வருதலுக்கு

வெல்லம் 50 கிராம், ஒரு பாக்கெட் சுண்ணாம்பு குழைத்து துணியில் நனைத்து கட்ட வேண்டும்.

வே. கிருஷ்ணன்
த/பெ. வேலுபிள்ளை
446, கல்பட்டு நைநான் குப்பம்
ஓசூர் போஸ்ட், வந்தவாசி வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம் – 604403

மயில்சாமிகவுண்டரின் மூலிகை வைத்தியம்

கோயமுத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், சிறுமுகை இடையர்பாளையம் கிராமத்தில் வசித்து வரும் மயில்சாமி கவுண்டர் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துவிட்டு விவசாயவேலை பார்க்க ஆள் இல்லாததால் விவசாயத்தில் இறங்கி விட்டார். இவர் கால்நடைகளுக்கு மூலிகை வைத்தியம் செய்து ஆயிரக்கணக்கான கால்நடைகளை காப்பாற்றி உள்ளார். இவர் இந்த சேவையை யாரிடமும் பணம் பெறாமல் 14 வயதிலிருந்து இலவசமாக செய்து வருகிறார். இவர் இவருடைய தாத்தா பெல்லைபாளையம் பழனிச்சாமி கவுண்டரிடமிருந்து இவருடைய கால்நடை மூலிகை வைத்தியத்தை கற்றுக் கொண்டார்.

கால்நடைகளுக்கு அஜீரண கோளாறு, காய்ச்சல், படுத்த மாடுகளுக்கு

மிளகு 30 கிராம், ஓமம் 50 கிராம் , சீரகம் 50 கிராம், வசம்பு 25 கிராம், எலுமிச்சைபழம் 2, வெள்ளைப்பூண்டு 50 கிராம், இஞ்சி 30 கிராம் இவற்றை நன்றாக அரைத்து மிதமான வெந்நீர் ஒரு லிட்டரில் கலக்கி உள்ளே கொடுக்க வேண்டும்.

காய்ச்சலுக்கு

களி தும்பை 2 கைப்பிடி, சிறுகீரை ஒரு கைப்பிடி, மாதுளை, பாக்கு 4, சீரகம் 50 கிராம், ஓமம் 30 கிராம், வசம்பு சிறிதளவு இவை அனைத்தையும் நன்றாக அரைத்து உள்ளே கொடுத்தால் கழிச்சல் குணமாகும். துத்தித்தழையை அரைத்து தீவனத்துடன் கலந்து கொடுத்தால் கழிச்சல் குணமாகும்.

இளநீர் 4, கரும்பு சர்க்கரை 50 கிராம், ஏலக்காய் 20 கிராம் இடித்து போட்டு வாயில் ஊற்றினால் கழிச்சல் குணமாகும். ரஸ்தாளி வாழை கொடுத்தால் கழிச்சல் குணமாகும்.

ஆடு, மாடு தீவனம் எடுக்காமல் இருந்தால்

நொச்சி இலை ஒரு கைப்பிடி, வேப்பிலை ஒரு கைப்பிடி, வெற்றிலை 6, துளசி ஒரு கைப்பிடி இவற்றை அரைத்து உள்ளே கொடுக்கலாம். அல்லது தண்ணீரில் கரைத்தும் கொடுக்கலாம். ஒரு நாளைக்கு 2 வேளை 4 நாள் கொடுக்க வேண்டும்.

படுத்த மாடு எழுந்திருக்க

கற்பூர வள்ளி இலை, துளசி, மூங்கில் இலை, நொச்சி, மாவிலங்கித்தழை, எருக்க மொட்டு இவை அனைத்தையும் ஒரு கைப்பிடி அளவு எடுத்து அரைத்து அதனுடன் சுக்கு 30 கிராம், மிளகு 30 கிராம், திப்பிலி 30 கிராம், ஓமம் 30 கிராம், கருஞ்சீரகம் 30 கிராம், இலுப்பை புண்ணாக்கு 1/4 கிலோ இவை அனைத்தையும் நன்றாக அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு 2 வேளை 10 லிருந்து 15 நாள் வரை கொடுக்க வேண்டும்.

குடற்புழு நீக்கம்

சோற்றுக்கற்றாழை வெறும் வயிற்றில் கொடுத்தால் நல்லது.

தாடை வீக்கத்திற்கு

சிறியாநங்கை 200 கிராம் இலையை அரைத்து 5 நாள் காலையில் வெறும் வயிற்றில் உள்ளே கொடுக்க வேண்டும்.

வெளிமருந்து: ஒரு பேய் குமட்டிக்காய், மஞ்சள் சிறிதளவு, வசம்பு சிறிதளவு இவற்றை அரைத்து தாடையில் குணமாகும் வரை தடவ வேண்டும்.

அம்மைக்கு

உள்மருந்து : சோற்றுக்கற்றாழை ஒரு மடல், மஞ்சள் 20 கிராம், வில்வஇலை 30 கிராம் இவை அனைத்தையும் அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

வெளி மருந்து:

சோற்றுக்கற்றாழை, மஞ்சள், வேப்பங்கொழுந்து, குப்பைமேனி இவைகளை தேவையான அளவு எடுத்து அரைத்து அம்மை உள்ள இடங்களில் பூச வேண்டும். இதனை 7 நாள் வரை பூச வேண்டும்.

தினமும் ஒரு ரஸ்தாளி வாழைப்பழம் காலையில் கொடுக்க வேண்டும்.

ஆடு மாட்டிற்கு புழு வைத்த புண்ணுக்கு

முந்திரிகன் தலை (அல்லது நிலக்கடம்பை) கற்பூரம் 2 வில்லை, சுண்ணாம்பு சிறிதளவு, புகையிலை சிறிதளவு இவற்றை அரைத்து புண்ணில் போட வேண்டும். மேலே ஈ அமராமல் இருக்க வேப்ப எண்ணெயை மேலே தடவ வேண்டும்.

விஷக்கடிக்கான அறிகுறிகள்

காது தொங்கும், காதை பிடித்துப் பார்த்தால் சூடு இல்லாமல் ஜில்லென இருக்கும். நாக்கை அடிக்கடி வெளியில் நீட்டும். தாடை வீங்கும் கண் நிறம் மாறும். கண்ணில் நீர் வடியும்.

மருந்து: வேப்பிலை 1/2 கிலோ அரைத்து மிளகு 50 கிராம், சுக்கு 50 கிராம் அரைத்து உள்ளே புகட்ட வேண்டும். காலை, மாலை இரண்டு வேளை ஒரு வாரம் கொடுக்க வேண்டும். வெப்பாலை இலை தேவையான அளவு அரைத்து மேல் பூச்சாக பூச வேண்டும்.

இளங்கொடி விழாதிருந்தால்

எள் மற்றும் வெல்லம் இரண்டையும் இடித்து உள்ளே கொடுக்க வேண்டும்.

வெண்டைக்காய் 1/2 கிலோ கொடுக்க வேண்டும்.

மடிநோய்க்கு

சிறுபொருமி இலை 1 கைப்பிடி, அப்பக்கோவை தழை மற்றும் வேலிபருத்தி இலை, மஞ்சள் இவற்றை அரைத்து மடியில் பூச வேண்டும்.

கண் புரை நோய்க்கு

நீலச்சுள்ளி இலையை சாறு எடுத்து கண்ணில் தினமும் சரியாகும் வரை 3 சொட்டு விட வேண்டும். நீலக்குவலை (சங்குப்பூ) சாறுடன் சிறிது புகையிலை இரண்டையும் கசக்கி கண்ணில் விட வேண்டும்.

கோவை இலை சாறுடன் சின்ன வெங்காயம் சேர்த்து சாறு எடுத்து கண்ணில் உள்ள புண்ணில் ஊற்றினால் கண் புண் குணமாகும்.

உண்ணி

வசம்பு மற்றும் பேய்க்குமட்டி இலை இரண்டையும் அரைத்து மேல் பூச்சாக பூச வேண்டும்.

கால் குளம்பு புண்ணுக்கு

டீசல் அல்லது மண்ணெண்ணை புண்மீது ஊற்றி விட வேண்டும். அல்லது மத்தான் தைலம் தயாரித்து புண்ணில் போடலாம்.

மத்தான் தைலம் தயாரிக்க ஊமத்தை இலை, குப்பைமேனி, துளசி மூன்றையும் இடித்து சாறு எடுத்து சம அளவு தேங்காய் எண்ணெய் சேர்த்து காய்ச்சி இறக்கும் பொழுது மயில்துத்தம் 10 கிராம் போட வேண்டும். பின்னர் வடிகட்டி ஒரு கண்ணாடி பாட்டிலில் சேமித்து வைத்து கொள்ளலாம்.

வாய்ப்புண் கோமாரி நோய்க்கு

வில்வஇலை, வேப்பங்கொழுந்து இரண்டையும் நன்றாக கொதிக்க வைத்து வாயை காலை மாலை கழுவ வேண்டும். இதனுடன் வசம்பு சேர்த்துக் கொள்ளலாம்.

கொம்பு உடைந்தால்

சுத்தமான துணியால் உடைந்த கொம்பை துடைக்க வேண்டும். வெள்ளை காட்டன் துணியில் நல்லெண்ணெய் மற்றும் வேப்பெண்ணெய் இரண்டையும் கலந்து நனைத்து நன்றாக சுத்தி கட்ட வேண்டும். அதில் ஈ அமராமல் இருக்க தினமும் வேப்ப எண்ணெயை தொட்டு போட வேண்டும்.

சினை பிடித்தால் அறிகுறி

பால் கறந்து பார்த்தால் பிசின் போல் (விளக்கெண்ணெய்போல்) வந்தால் அது சினையாகும். பால் தண்ணியாக இருந்தால் சினை இல்லை. சினை பிடித்த மாடு அமைதியாக காணப்படும். கன்று ஈன்ற மாடு பால் கொடுக்க வில்லையென்றால் கம்பரிசி கஞ்சி 2, 3 நாள் கொடுக்க வேண்டும். மோரில் உப்பு மற்றும் பொரி போட்டு கன்றின் மேல் தெளிக்க வேண்டும். இது போன்று செய்தால் மாடு கன்றை நாவால் நக்கி கொண்டு அமைதியாக நிற்கும்.

தாடை வீக்கத்திற்கு

ஓமம், மஞ்சள், வசம்பு, கசகசா ஆகாச கருடன் தழை இவற்றை அரைத்து தாடையில் வீக்கம் குறையும் வரை போட வேண்டும்.

நாய் கடித்தால்

வேப்பங்கொழுந்து, நாயுருவி இலை இரண்டையும் அரைத்து கடிவாயில் பூச வேண்டும். இதனை ஒரு வாரம் பூச வேண்டும்.

பெண்களுக்கு பால் கட்டு வந்தால்

ஆகாச கருடன் தழையை நல்லெண்ணெய் தடவி நல்லெண்ணெய் விளக்கில் காட்டி மார்பில் ஒட்ட வேண்டும்.

குழந்தை கழிச்சலுக்கு

வசம்பை நல்லெண்ணெய் விளக்கில் சுட்டு அதை தாய்ப்பாலில் உரசி நாக்கில் தடவினால் உடனே சரியாகும்.

மாந்தம் ஏற்பட்டால்

விரலிமஞ்சள் 1/2 விரல் அளவுக்கு எடுத்து அதனை கல்உப்பு போன்று தட்டி அதனை ஒரு இரும்புச் சட்டியில் போட்டு தீ பிடிக்கும் வரை கருக்கி (வறுத்து) எடுத்துக்கொண்டு அதனுடன் ஓமம் ஒரு கரண்டி இரும்புச்சட்டியில் போட்டு அது நன்கு வெடித்தவுடன் ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி கொதிக்க வைத்து பிறகு அந்த தண்ணீரை வடிகட்டி கொடுக்கவேண்டும்.

கீழாநெல்லி 15 கிராம் ஒரு டம்ளர் தண்ணீரில் வேக வைத்து அந்த விதையை வடிகட்டி அரைத்து பிறகு வடிகட்டிய தண்ணீரில் கலந்து குடிக்க வேண்டும்.

6 வயதிற்கு மேல் உள்ள குழந்தைகளுக்கு 3 மாதுளம் பிஞ்சை நன்றாக அரைத்து மோரில் கலந்து கொடுக்க வேண்டும்.

மயில்சாமி, இடையர்பாளையம், அன்னூர் வட்டம், கோயபுத்தூர் மாவட்டம், செல் : 9994509868

பிற மாநில உத்திகள்

சினை பிடிக்காமைக்கு

குஜராத், ஆரவள்ளி மாவட்டத்தில் சிவராஜ்புரா கிராமத்தில் சுபாஷ்பாய் பட்டேல் மற்றும் ராமாபென் கடந்த 5 வருடங்களாக இயற்கை வேளாண்மை செய்து வருகின்றனர். இவர் கால்நடைகளுக்கு குடற்புழுக்களை கட்டுப்படுத்த அவ்வப்போது வேப்பமரதழைகளை தீவனமாகத் தருகிறார்.

சினை பிடிக்காத மாடுகளுக்கு 6 வில்வப்பழங்கள் பெருஞ்சீரகம் 100 கிராம் சேர்த்து அரைத்து உள்ளே கொடுக்கிறார். இதனை 12 முதல் 13 நாட்கள் கடைபிடித்து வர வேண்டும்.

வயிறு உப்பிசத்திற்கு

மூன்று எலுமிச்சை பழங்களை சாறு பிழிந்து மோருடன் கலந்து உள்ளே கொடுக்கிறார். இவ்வாறு செய்தால் 2 மணிநேரத்தில் குணமாகிவிடும்.

நிலத்தில் தேனீக்கள் வருவதற்கு குஜராத் மாநிலத்தில் சுதந்திரநகர் மாவட்டத்தில் லின்படி கிராமத்தில் தயாபாய் என்பவர் பாசிப்பயிறு. உளுந்து, நிலக்கடலை, பாகற்காய், வெண்டை, சுரைக்காய் கொத்தமல்லி, கேரட், நெல்லிக்காய் போன்ற பயிர்களை பயிரிட்டு வருகிறார். இப்பயிர்களில் தேனீக்கள் மூலம் நல்ல மகரந்தச்சேர்க்கை நடைபெறுகிறது. இதனால் தேனீக்களை கவருவதற்கு கீழ்கண்ட முறையில் திரவக்கரைசல் தயார் செய்து தெளிக்கிறார்.

15 லிட்டர் நீரில் வெல்லம் 1/2 கிலோ, பசும்பால் 100 மி.லி கலந்து பயிரிட்டுத் தெளிக்கிறார். இதனை பூ பூக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும். 5 நாள் கழித்து இரண்டாம் முறையாகவும், 15 நாள் கழித்து 3ம் முறையாகவும் தெளிக்க வேண்டும். இவர் மாடுகளுக்கு ஏற்படும் வயிறு உப்பிசத்திற்கு மோருடன் சோடா உப்பு 10 கிராம் மற்றும் பெருங்காயம் 10 கிராம் கலந்து உள்ளே கொடுக்கிறார்.

இளநீர் தெளித்து விளைச்சல் தரத்தைக் கூட்டுதல்

குஜராத் மாநிலம் ஜுனாகர் மாவட்டத்தில் லிம்புதாரா கிராமத்தில் பிப்பின்பாய்ஜாதவபாய் பந்தாரி, நிலக்கடலை, கோதுமை, துவரை, சிறுதானியங்களை இயற்கையாக பயிர் செய்து வருகின்றார்.

கம்பு அறுவடை செய்தபின் அதன் தட்டைகளை வைத்து கம்போஸ்ட்டு உரம் தயார் செய்கிறார்.

இவர் ஒரு வாளியில் 15 லிட்டர் நீரில் வெல்லம் 100 கிராம், பசும்பால் 1/4 லிட்டர், இளநீர் 1/2 லிட்டர் கலந்து பயிர்களுக்குக் கலந்து தெளிக்கிறார். இதனால் பயிரில் ருசியான பழங்கள் தானியங்கள் கிடைக்கின்றன.

தேனீ : 34405 – அக்டோபர் – டிசம்பர் 2023

இயற்கை வேளாண்மையில் சீரகசம்பா

என்னுடைய இயற்கை வேளாண்மை அனுபவங்களை பிரசுரித்திருந்தீர்கள். சென்ற மாதம் மாத அறுவடை சமயம், குருவிகள் நூற்றுகணக்கில் நித்தமும் மேய வந்தன. முதலில் வயலின் அருகே உள்ள மரத்தில் 10–20 சிட்டுக்குருவிகள் மட்டும் வரும். பின்னால் நூற்றுக்கணக்கில் சிட்டுக்குருவிகள் கூடி வரும். இவை அனைத்தும் மொத்தமாக வயலில் இறங்கி குறிப்பாக காலை நேரம் அல்லது மாலை நேரம் நெல் மணிகளை கொத்தித் தின்று விடும். நானும் விரட்டுவதற்கு பல உத்திகளைக் கையாண்டு பலனில்லை. இயற்கையாக விளைந்த சீரக சம்பாவில் மணம் உள்ளதால் இக்குருவிகள் எங்கள் வயலுக்கு வந்து விடுகின்றன. சுற்றிலும் வெள்ளாமை இல்லாததாலும் எங்கள் வயலில் அதிக குருவிகள் தொல்லை காணப்படுகிறது.

குருவிகள் நம்மைப் போன்று ஜீவன்களாதலால் இரக்கப்பட்டு அதை கண்டு கொள்ளாமல் விட்டு விடுகின்றேன்.

குருவிகளை விரட்டுவதற்கு ஒரு தகர டப்பாவை தட்டி ஒலி எழுப்புகிறேன். பாடலுக்கு ஏற்ற இசை போன்று தாளம் போடுவதால் பல பஜனை பாடல்களை பாடி

பழகிக் கொண்டேன். சென்றாண்டு 6 ஆறு சென்ட் நிலத்தில் 14 மூடைகள் கிடைத்தன. தற்சமயம் குருவிகள் மேய்ந்ததால் 11 மூடைகள் மட்டுமே கிடைத்தன. அடுத்தாண்டு சீரகச்சம்பாவை பயிர் செய்யாமல் வேறு குள்ளைகாரு போன்ற பாரம்பரிய ரகங்களை பயிரிட உள்ளேன்.

சீரகச்சம்பா அரிசி பிரியாணி செய்வதற்கு உகந்ததாக உள்ளது. இதனுடைய ருசியினால் சாப்பாடு அதிகமாக சாப்பிடலாம். ஆனால் பழைய சாதத்திற்கு ஏற்ற ரகமல்ல. குருவிகளைப் போன்று மயில்களும் நிலத்திற்கு வந்து கதிர்களை கொத்துகின்றன. மயில்களை விரட்டிவிட்டால் உடனே பறந்து விடும். ஆனால் குருவிகள் என்ன செய்தாலும் எளிதில் செல்லாது.

தமிழ்மணி, 3/153, நாடார் தெரு,
படிக்காசு வைத்தான்படி, ஸ்ரீவில்லிபுத்தூர்,
விருதுநகர் மாவட்டம், செல் : 9245134568

கஞ்சனின் கால்நடை வைத்தியம்

மாடுகளில் இனப்பெருக்க குறைபாடுகள்

காமசர்க்கரை, பூமிசர்க்கரை, மதாம்சர்க்கரை ஆகிய கிழங்கு மாவுகளை எடுத்து நெய் (1/4 பல்) ஆகியவற்றுடன் நன்றாக ஆட்டி பால் 1/2 லிட்டர் சேர்த்து ஒரு நாளைக்கு ஒரு தடவை வீதம் 3 வாரம் தொடர்ந்து ஊற்றினால் இனப்பெருக்க கோளாறு சரியாகிவிடும். இதுவரை 100 மாடுகளுக்கு மேலாக சினைபிடிக்க வைத்துள்ளார். இவர் இந்த வைத்திய முறையை 20 ஆண்டுகளாகச் செய்து வருகிறார்.

குண்டிகை இலை (ஈரல் நோய்)

காரணம் : காய்ந்த சருகுகளை அதிகம் சாப்பிடுவதால் உண்டாகிறது.

நிவாரணம் : ஊஞ்சமரப்பட்டை தழை 200 கிராம், சீரகம் 50 கிராம், மிளகு 5, வில்வங்க பூண்டு 5 அரைத்து ஒரு நாளைக்கு ஒரு தடவை வீதம் 3 வாரம் தொடர்ந்து ஊற்றினால் சரியாகிவிடும்.

சிலை நோய்/ மூக்கு சுண்டுதல்

வேலிப்பருத்தி இலை 1/4 கிலோ அரைத்து உள்ளே ஊற்றினால் சரியாகிவிடும். மேலும் கொடி எடுத்து கழுத்தில் கட்டினால் சரியாகிவிடும்.

விஷக்கடிக்கு

தொட்டிக்கால் வேர், புங்கப்பட்டை (சிறிதளவும்), மிளகாய் 2 அரைத்து சுடுதண்ணீரில் கலந்து 2 நாள் கொடுத்தால் சரியாகிவிடும்.

கஞ்சன், த/பெ. புட்டதம்படி
ஈராட்டி தாமரைக்கரை அஞ்சல், அந்தியூர் வழி,
பவானி தாலுகா. ஈரோடு மாவட்டம்

சிக்கையா நாயக்கரின் கால்நடை மூலிகை வைத்யம்

ஈரோடு மாவட்டம் பர்கூர் வனப்பகுதியில் குப்பையூர் கிராமத்திலுள்ள கள்ளிக்கட்டை பகுதியில் வசிக்கும் சிக்கையாநாயக்கருக்கு 65 வயதாகிறது. இவர் மனைவி மற்றும் 2 மகன்களுடன் கூட்டுக் குடும்பமாக வாழ்க்கை நடத்தி வருகிறார். 30 வருடங்களுக்கு முன்னர் இவரிடம் 500 நாட்டு மாடுகளும் 30 எருமைகளும் இருந்தன. தற்சமயம் மலையில் மேய்ச்சல் பிரச்சினை காரணமாக 25 மாடுகள் மட்டும் உள்ளன. இவர் தோட்டத்தில் பட்டிபோட்டு 25 மாடுகளையும் ஒரு எருமையையும் மட்டுமே வைத்துள்ளார். இதில் வருடத்திற்கு சுமார் 1 1/2 லோடு எரு எடுத்து விற்பனை செய்கிறார்.

பர்கூர் இனமாட்டு பொலிகாளைகளை எங்ஙனம் தேர்ந்தெடுக்க வேண்டும்?

உடம்பு சுத்த செவலையாக இருக்க வேண்டும். கண் பகுதியில், அல்லையில், வெதரில் மறை இருக்க வேண்டும். இரண்டாவது அல்லது 3வது கீத்து பால் மாட்டிலிருந்துதான் பொலிகாளை தேர்வு செய்யப்படுதல் வேண்டும். வால் சன்னமாகவும் குஞ்சம் நிலத்தைத் தொட வேண்டும். கொம்பு நீளமாகவும், முன்புறம் சற்று வளைந்து இருக்க வேண்டும். தாய் நல்ல பால் கொடுக்கும் வம்சத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். பட்டியில் மயிலை கலரில் உள்ள மாட்டை மலைமாடு என்றும் செம்மறையை மட்டும் பர்கூர் மாடு என்றும் கூறுவர். நான்கு பல்லிலிருந்து ஆறு பல் இருக்கும் வரை காளைகளை இனப்பெருக்கம் செய்ய விட வேண்டும்.

குண்டி சிலைக்கு

இந்நோய் வந்த மாட்டுக்கு மூக்கு இழுக்கும் (சளி பிடிக்கும்) 3 நாட்களில் இறந்துவிடும். இதற்கு வேலிப்பருத்தி செடியை மிளகு, பூண்டு சுடுநீர் சேர்த்து அரைத்து பாலில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

நெய் மணமாக கிடைக்க

இப்பகுதியில் நாட்டு பசுக்களிலிருந்து கறக்கப்பட்ட பாலை ஆச்சா, வெடத்தளை (உடவார்) விறகு

கொண்டு காய்ச்சுவர். இதனால் பால் சிவப்பாகக் காய்ந்து ஆடை, கட்டும். இதிலிருந்து பின் நெய் காய்ச்சினால் நல்ல வாசனையுடன் கூடிய தரமான நெய் கிடைக்கும்.

மாட்டு வால் அரித்துவிட்டால்

மாட்டுக்கு வாலில் கோத்தி விழுந்தால் (வால் நுனி தின்று கொண்டே குறைந்து வரும்) வண்ணான் அவுரி தழை, புகையிலை, புளி அரைத்து வாலில் தடவி துணி வைத்துக் கட்டி விட வேண்டும்.

சிக்கையா நாயக்கர்

கள்ளிக்கட்டை, குட்டியூர், தாமரைக்கரை அஞ்சல்

பர்கூர் வழி, அந்தியூர் வட்டாரம், ஈரோடு மாவட்டம்.

காளை பராமரிப்பிற்கு

தமிழ்நாடு எல்லையில் அமைந்துள்ள கர்நாடக மாநில சூலக்கோம்பு ஓர் ஊராகும். இவ்வூரில் பத்ரிசித்தே கவுடா 30 நாட்டு மாடுகள் சொந்தமாக பட்டி வைத்து பராமரித்து வருகிறார். இவரிடம் சுத்தமான பர்கூர் காளைகள் உண்டு. காளைமாட்டிற்கு பலம், தெம்பு உண்டாக வருடத்திற்கு ஒரு தடவை கீழ்க்கண்டவாறு மருந்து தயார் செய்து கொடுத்து வருகிறார்.

செய்முறை: (பர்கூர் மாட்டு காளைக்கு செண்பகமரத்தின் பூ 3 எடுத்து முற்றிய தேங்காய் 3, பச்சரிசி ஒரு கிலோ, வெல்லம் 1/2 கிலோ அரைத்து மொந்தன் வாழைப்பழம் 3 திராட்சை 500 கிராம். மாட்டு நெய் 100 மி.லி. சேர்த்து 3 லிட்டர் பாலில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். இந்த போஸக்கை ஞாயிற்றுக் கிழமை தர வேண்டும். வருடத்திற்கு ஒரு தடவை கொடுத்தால் போதுமானதாகும். மயிலை மாட்டு காளைக்கு (மலைமாடு கட்டமல்லி என்ற செண்டுமல்லிபூ அத்தமக்காரை, காமசர்க்கரை ஒரு கிழங்கு பூமிசர்க்கரை ஒரு கிழங்கு மதமசர்க்கரை (3 கிழங்கு) தேங்காய் 3, பச்சரிசி 1 கிலோ, வெல்லம், மாட்டு நெய் 100 மிலி சேர்த்து 3 லிட்டர் பாலில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். இந்த போஸாக்கை ஞாயிற்றுகிழமை தர வேண்டும். வருடத்திற்கு ஒரு தடவை செய்தால் போதுமானது. மருந்து கொடுத்த நாளில் தண்ணீர் காட்டக்கூடாது. அன்று பசு மாட்டிற்கு தாண்டவிடக்கூடாது.

இவரிடம் ஒரு வாரத்தில் (6 நாளில் சேரும்பால், திங்கள்கிழமை மாட்டுக்கு பால் பீய்ச்ச மாட்டார்கள்) 5 லிட்டர் பால் சேரும். இதனை காய்ச்சினால் 1 1/2 லிட்டர் நெய் கிடைக்கும். நெய் வாசனையுடன் தரமாக இருக்கும்.

தகவல் : லிங்காயத் மக்களின் இயற்கை சார்ந்த கலாச்சாரத்தைப் பாதுகாக்க ஒரு வரைமுறை– சேவா, 2009

தடுப்பணை கட்டி நிலத்தடிநீர்மட்டம் கூட்டுதல்

எங்கள் ஊரில் மலையடிவாரத்தில் வனத்தை ஒட்டியுள்ள எங்கள் நிலம் அமைந்துள்ளது. அருகில் ஓடையில் மழைக்காலத்தில் தண்ணீர் வரத்து இருக்கும். பின்னர் வற்றிவிடும். இந்த ஓடையில் 2 தடுப்பணைகள் நானே சொந்த செலவில் கட்டினேன். இதனால் ஓடையில் அரிப்பு ஏற்பட்டு பள்ளமாகாமல் உள்ளது. சுமார் 20 ஏக்கரில் 2005 ல் தோதகத்தி மஞ்சகடம்பு, வேங்கை, செஞ்சந்தனம், தேக்கு, சந்தனம், போன்ற மரங்களை நட்டு தற்சமயம் 11 வருடங்களாகின.

இந்த தடுப்பணை கட்டியதாலும் மரங்களை நட்டதாலும் தடுப்பணையில் நீர் நிரம்பி வருடம் முழுவதும் ஓடையில் நீர் வழிகின்றது. சுற்றுவட்டாரப்பகுதியில் சுமார் 2 கி.மீ. பகுதி வரை உள்ள கிணறுகளில் நீர் மட்டம் கூடி விவசாயம் செழித்துள்ளது.

இப்பகுதிக்கு 21 கி.மீ. தார்ச்சாலைகள், பாலங்கள் சொந்த செலவிலும், மற்றும் அரசாங்க செலவிலும். செய்துள்ளதால் அனைத்து விவசாயிகளும், வனஇலாகா பணியாளர்களும் வாகனங்களில் சென்று வர முடிகிறது. இதற்கு நாங்கள் ஏற்படுத்திய இயற்கை விவசாய சங்கமும் உறுதுணையாக இருந்தது.

இயற்கை வேளாண்மையில் விவசாயிகள் வெளியிடு பொருளைக் குறைத்து, விவசாயிகளின் தேவைகளான சாலைவசதி, தடுப்பணை கட்டுதல் இவைகளை உள்ளடங்கிய முன்னேற்றப்பாதைதான் நிலைத்த நீடித்த வளமையைத் தரும்.

அந்தோணிசாமி, சிந்தாமணி, புளியங்குடி, தென்காசி மாவட்டம். செல் : 9443582076

பெரிய கிணறு உண்டாக்கி நீர் தேவையை நிறைவு செய்தல்

மஹாராஷ்டிரா மாநிலத்தில் பீட் மாவட்டத்தில் பாடல்சுங்கி கிராமத்தில் மாருதி பச்குடே என்ற விவசாயி தனது தோட்டத்தில் ஒரு மிகப் பெரிய கிணறு தோண்டியுள்ளார். இவருக்கு 12 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. கோடை காலத்தில் வறட்சி தாங்க நீரை சேகரிக்க விரும்பினார். இதற்கு 222 அடி விட்டமும் 41 அடி ஆழமும் கொண்ட ஒரு கிணற்றை தோண்டியுள்ளார்.



கிணற்றின் விட்டம் 222 அடி, ஆழம் 41 அடி

இதில் தேங்கி உள்ள நீர் 3 ஆண்டுகளுக்கு போதுமானது எனக்கூறுகிறார். அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலை உள்ளது. கிணறு தோண்டும்போது கிடைத்த செம்மண், கப்பிமண், போன்றவற்றை நெடுஞ்சாலை துறைக்கு கொடுத்து விட்டேன். தோண்டும்போது கிடைத்த கற்களை கொண்டே கிணற்று சுவர் எழிப்பி உள்ளார். இவருடைய நிலத்தின் ஒரு பகுதியை நெடுஞ்சாலைத்துறை எடுத்து கொண்டதால் அதில் கிடைத்த நிவாரணத் தொகையுடன் மேலும் தான் சம்பாதித்த பணம், மனைவியின் நகை விற்ற பணம் மொத்தம் ரூ. 1 1/2 கோடி பணம் கொண்டு கிணற்று வேலையை முடித்துள்ளார். இதற்கு 3 பொக்லைன் இயந்திரம், 10 ஹைவா வாகனங்கள் வைத்து வேலை செய்துள்ளார். முன்பு மானாவாரி நிலமாக இருந்த பூமி இக்கிணற்றில் நீர் நிரம்பிய பின் பழப்பயிர் சாகுபடி செய்யப்படும் நீர்ப்பாசன நிலமாக மாறியுள்ளது. தற்சமயம் சாத்துக்குடி ஆரஞ்சு 8 ஏக்கர் நிலத்தில் நீர் பாய்ச்சி சாகுபடி செய்கிறார்.

பீடு மாவட்டத்தில் உள்ள கங்கிஷ்வர் கோவிலுக்கு பார்க்க மக்கள் வருவார்கள். இதே போன்ற மக்கள் கூட்டம் இவரது கிணற்றை பார்க்கவும் வந்த வண்ணம் உள்ளார்கள். இவருடைய யோசனைப்படி 5–6 விவசாயிகள் ஒன்று சேர்ந்து கூட்டு கிணறு உண்டாக்கி விட்டால் நிலத்திற்கு போதுமான நீர் வருடம் முழுவதும் கிடைக்கும் எனக் கூறுகிறார்.

மாருதி பச்குடே

தகவல் : வாட்ஸ்அப் செய்தி

குறைந்த செலவில் இ.எம். எனப்படும் நுண்ணுயிர் திரவ உரம் தயாரிப்பு

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு இ.எம். உரக்கரைசல் திரவத்தின் விலை ஒரு லிட்டர் 90 ரூபாய் நாளடைவில் இதன் விலை படிப்படியாக அதிகரித்தது. இன்றைக்கு ரூ 600–1000 என இன்று விற்பனை செய்யப்படுகிறது. பல்வேறு நிறுவனங்கள் வெவ்வேறு பெயர்களில் இ.எம் விற்பனை செய்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை தரம் குறைவானதாகவே உள்ளன. நம்முடைய விவசாயிகள், இந்த அளவுக்கெல்லாம் விலை கொடுத்து இத்திரவத்தை வாங்க வேண்டியதில்லை. என்னதான் அற்புதமான அருமருந்தாகவே இருந்தாலும், குறைந்த செலவில் அதைத் தாமாகவே உருவாக்கிக்கொள்வதே சாமர்த்தியம். இது தான் இயற்கை விவசாயத்தின் அடிப்படை இலக்கணம். ஜப்பான் நாட்டுத் தாவரவியல் பேராசிரியர் தீரோ ஹைஹா கண்டுபிடித்த இ.எம் திரவத்தின் லேக்டோபேசிலஸ், ஈஸ்ட், சுக்ரோஸ் ஆகியவை அதிக

அளவில் நிறைந்துள்ளன. இவற்றின் செயல்பாடுகளால்தான் பயிர்கள் செழிப்படைகின்றன. கால்நடைகளின் உடல் ஆரோக்கியம் மேம்படுகிறது. பால் மூலம் லேக்டோ பேசிலஸையும் அரிசி கழுவிய தண்ணீர் மூலம் ஈஸ்ட்டையும், வெல்லத்தின் மூலம் சுக்ரோஸையும் உற்பத்தி செய்ய முடியும். எனவே விவசாயிகள் தங்களுடைய வீட்டிலேயே மிக எளிதாக இ.எம். திரவத்தை தயார் செய்து கொள்ள முடியும். இது நான் கண்டுபிடித்த தொழில்நுட்பம் ஆகும். தமிழ் நாட்டில் பல விவசாயிகள் இதை பயன்படுத்திப் நல்ல முறையில் பலனடைந்து வருகிறார்கள். இதைத் தயார் செய்யும் வழிமுறைகள் குறித்துத் தற்போது பார்ப்போம். அரிசி கழுவிய தண்ணீர் (கழுநீர்) ஒரு லிட்டர், காய்ச்சாத பால் ஒரு லிட்டர் ஆகியவற்றை ஒன்றாக கலந்து, பிளாஸ்டிக் அல்லது கண்ணாடி குடுவையில் ஊற்ற வேண்டும். பருத்தித் துணியால் குடுவையின் வாய்ப்பகுதியை மூடி வேடு கட்டி வைக்க வேண்டும். காற்றோட்டம் தேவை என்பதால் பருத்தித் துணியில் வேடு கட்டுவது மிகவும் அவசியம். அந்தக் குடுவையை எப்போதும் ஒரே சீதோஷ்ண நிலை நிலவக்கூடிய இருட்டான பகுதியில் 7 நாட்கள் வைத்திருக்க வேண்டும்.



வீட்டில் உள்ள அறையில் குடுவையை வைத்துக் கதவு ஜன்னல்களை மூடி வைப்பது சிறப்பான வழிமுறையாகும். 7 நாள்களுக்கு பிறகு பருத்தித் துணியை நீக்கினால். குடுவையில் சுமார் 1 அங்குலம் தடிமனுக்குப் படலம் உருவாக்கியிருக்கும். அதைத் தனியாக எடுத்து வெளியேற்றி விட வேண்டும். குடுவையில் 1–1.25 லிட்டர் அளவில் திரவம் இருக்கும். அதை எடுத்து ஒரு பிளாஸ்டிக் பாத்திரத்தில் ஊற்றி அதனுடன் ஒரு லிட்டர் வெல்லக்கரைசல் கலந்து, மூடி வைக்க வேண்டும். தினமும் காலை அல்லது மாலை நேரத்தில் மூடியை ஒரு முறை மட்டும் திறந்து மூடி வைக்க வேண்டும். 8 ம் நாள் இ.எம். கரைசல் என்ற திறன்மிகு நுண்ணுயிர் திரவம் தயாராகிவிடும்.

இது தாய் திரவமாகும். இதை ஓர் ஆண்டு வரை வைத்திருந்து தேவைக்கேற்ப அவ்வப்போது சிறிதளவு எடுத்து பயன்படுத்திக்கொள்ளலாம். ஒரு பிளாஸ்டிக் கேனில் 100 லிட்டர் தண்ணீர் நிரப்பி, அதில் ஒரு லிட்டர் தாய் திரவம், 5 கிலோ வெல்லம் சேர்த்து கரைசல் தயார் செய்ய வேண்டும். இதை 3 மாதங்கள் வரை வைத்திருந்து. தேவைக்கேற்ப எடுத்து பயன்படுத்தி கொள்ளலாம். நெல்,வாழை, கரும்பு, பயறு வகைகள் காய்கறிகள் உள்ளிட்ட அனைத்து பயிர்களுக்கும் இதைப் பயன்படுத்தலாம். 15 நாட்களுக்கு ஒரு முறை 10 லிட்டர் தண்ணீருக்கு 10 மி.லி வீதம் இ.எம் கரைசல் கலந்து பயிர்கள் மீது தெளிக்கலாம். மாதம் ஒரு முறை பாசனநீரில் ஒரு ஏக்கருக்கு 3 லிட்டர் வீதம் இ.எம் கரைசல் கலந்து விடலாம்.

நன்றி : பசுமை விகடன்

அமுக்கராங்கிழங்கு தயாரிப்புகள்

திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் திருமதி. இராஜேஸ்வரி ரவிக்குமார் (59 வயது) வசித்து வருகிறார். இவர் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் இயற்கை முறையில் உணவுப்பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறார். இவர் பலவிருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். இவர் அமுக்கராங் கிழங்குகளிலிருந்து பல உணவு பொருட்களை தயார் செய்துள்ளார்.

அமுக்கராங்கிழங்கு பருப்பு சாதப்பொடி

துவரம் பருப்பு 200 கிராம், கடலைப்பருப்பு 200 கிராம், வறுகடலை 200 கிராம், பயத்தம் பருப்பு 200 கிராம், கருப்பு உளுந்தம் பருப்பு 100 கிராம், வேர்க்கடலை 100 கிராம், பாதாம் 50 கிராம், முந்திரி 50 கிராம், பிஸ்தா

20 கிராம், வால்நட் 20 கிராம், அமுக்ராகிழங்கு 300 கிராம், மிளகு 25 கிராம், சீரகம் 25 கிராம், பெருங்காயம் 20 கிராம், இந்துப்பு 100 கிராம், சிவப்பு மிளகாய் 100 கிராம், மல்லி விதை 100 கிராம் இதை அனைத்தையும் சுத்தமான எண்ணெய் சிறிது விட்டு பொன்னிறம் வரும் வரை வறுக்கவேண்டும். பின்னர் மிக்ஸியில் நைசாக அரைத்து கருவேப்பிலையை வறுத்து இந்த பொடியுடன் கலந்து வைக்கவும். சூடான சாதத்துடன் பசும் நெய் அல்லது எண்ணெய் விட்டு சிறு குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவரும் சாப்பிடலாம். எளிய நிறைவான உணவு.
பயன்கள் : புரதச்சத்து நிறைந்தது. சுண்ணாம்புச் சத்து நிறைந்தது. பருப்புகளுடன் அமுக்கராங் கிழங்கு சேரும்போது இரும்புச்சத்து அதிகரிக்கிறது. தினசரி 2 ஸ்பூன் சேரும் போது உடலுக்கு தேவையான புரதச்சத்து, இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து அனைத்தும் கிடைக்கிறது. நரம்புகளை பலப்படுத்துகிறது. குழந்தையின்மையை போக்குகிறது.

அமுக்கராங்கிழங்கு சூப்

பார்லி ஒரு கிலோ, கொள்ளு 500 கிராம், அமுக்கராங்கிழங்கு 300 கிராம், மிளகு 20 கிராம், சீரகம் 20 கிராம், கிராம்பு 10 கிராம், லவங்கப்பட்டை 10 கிராம், கசகசா 20 கிராம், பிஸ்தா 20 கிராம், சுக்கு 20 கிராம், பூண்டு 20 கிராம், இந்துப்பு 200 கிராம்.
செய்முறை : அனைத்துப்பொருள்களையும் வாசம் வரும் வரை வறுத்து பவுடராக அரைத்து கொள்ளவும் ஒரு ஸ்பூன் சூப் பவுடர் எடுத்து ஒரு கப்பு தண்ணீரில் கலந்து 5 நிமிடங்கள் கொதிக்கவிட்டு சூடாக குடிக்கவும். தேவைப்பட்டால் 2 சொட்டு எலுமிச்சை பழச்சாற்றை விட்டுக்கொள்ளலாம்.
பயன்கள் : இந்த அமுக்கராங்கிழங்கு சூப் தினம் ஒரு கப் அருந்தினால் உடலில் உள்ள தேவையில்லாத கெட்ட நீர் வெளியேறி விடும். தேவையில்லாத உடலில் உள்ள ஊளைச்சதை குறைந்து எடையும் குறைந்து உடல் இறுக்கமாகும். சளி, இருமல் மூச்சிறைப்பு குறையும். நரம்புகள் பலப்படும். இரத்த சர்க்கரை அளவை குறைக்கும். இரத்த அழுத்தத்தை குறைக்கும். ஞாபகமறதி குறையும்.

அஸ்வகந்தா அமுக்கராங் கிழங்கு தேநீர்

அமுக்கராங் கிழங்கு 500 கிராம், சுக்கு 200 கிராம், நெல்லிக்காய் 300 கிராம், சித்தரத்தை 100கிராம், அதிமதுரம் 100 கிராம், கோரைக்கிழங்கு 100 கிராம், கடுக்காய் 50 கிராம், தான்றிக்காய் 50 கிராம், திப்பிலி 20 கிராம், மிளகு 20 கிராம், சீரகம் 20 கிராம், கருஞ்சீரகம் 10 கிராம், ஓமம் 20 கிராம், லவங்கம் 10 கிராம், அண்ணாசிப்பூ 10 கிராம், மஞ்சள் 20 கிராம், மல்லி விதை 50 கிராம், சோம்பு 20 கிராம், வெந்தயம் 20 கிராம், துளசி 10 கிராம், ஆவாரம் பூ 10 கிராம், செம்பருத்தி 10 கிராம், கிரிம் டீ 50 கிராம், பனங்கற்கண்டு 1 கிலோ, ஓரியண்ட் பிரமி இலை (Oriend Brahmi leaves) 20 கிராம், கிராம்பு 20 கிராம்.
செய்முறை : பூ இலைகளை தவிர மற்ற எல்லாவற்றையும் வறுத்து சற்று கரகரப்பாக பொடி செய்து கொள்ளவும். இந்த பொடியுடன் பனங்கற்கண்டு கலந்து கொள்ளலாம்.
ஒரு ஸ்பூன் அமுக்கராங்கிழங்கு தேநீர் மிக்ஸியுடன் ஒரு கப் தண்ணீர் சேர்த்து 5 நிமிடங்கள் கொதிக்க வைத்து 2 சொட்டு எலுமிச்சை பழச்சாற்றை விட்டு சூடாக அருந்தவும்.
பயன்கள் : இந்த அமுக்ரா மூலிகையுடன் 25 விதமான மருத்துவ குணம் கொண்ட பொருட்களும் சேர்ந்து தினம் ஒரு கப் அருந்தும் போது அபரிமிதமான நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது.
வைட்டமின் சி, அயன் கால்சியம் போன்ற வேறு பல நுண்ணூட்டச்சத்துகளும் கிடைக்கிறது. தடையில்லாத இரத்த ஓட்டம் நினைவாற்றல், நரம்புகளை பலப்படுத்துகிறது. இதய அடைப்பு ஏற்படாமல் செய்கிறது. அடிக்கடி சளிப்பிடித்தல், இருமல், தீராத மலச்சிக்கல், மூட்டுவலி, தலைவலி, என பல உடல் சிக்கல்களை வரும் முன் தடுக்க உதவுகிறது. நுரையீரலையும் பலப்படுத்துகிறது. தற்போது அதிகரித்து வரும் சர்க்கரை நோயையும் குறைக்கிறது. குழந்தையின்மையையும் நீக்குகிறது. இந்த அமுக்கராங்கிழங்கு தேநீரை தினமும் அருந்தி வரும் போது அதன் பலனை நாம் உணர முடியும். இந்த பொடியை ஒரு கப் தண்ணீர் சேர்த்து இளம் சூட்டில் கிளறி நெய் விட்டு கிளறினால் லேகியமாகவும் சாப்பிடலாம்.

அமுக்கரா அஸ்வகந்தா சப்பாத்தி

கோதுமை 500 கிராம், வெள்ளை சோளம் 50 கிராம், அமுக்கராங்கிழங்கு 500 கிராம், சீரகம் 20 கிராம், வெந்தயக்கீரை 20 கிராம், இந்துப்பு 20 கிராம்.
செய்முறை : இவை அனைத்தையும் பவுடராக அரைத்து சப்பாத்தி செய்யலாம். தோசையாகவும் செய்யலாம்.

அமுக்கராங்கிழங்கு சிறுதானிய லட்டு, களி

தேவையான பொருட்கள் : ராகி 100 கிராம், கம்பு 100 கிராம், வேர்க்கடலை 100 கிராம், வறுகடலை 100 கிராம், தினை 100 கிராம், அமுக்கராங்கிழங்கு 300 கிராம், பாதாம் 50 கிராம், முந்திரி 50 கிராம், ஏலக்காய் 20 கிராம், முருங்கைக்கீரை 20 கிராம், பச்சைப்பயறு 100 கிராம், கருப்பு உளுந்து 100 கிராம், நெய் 200 மி.லி. நாட்டுச்சர்க்கரை 500 கிராம்.

அனைத்தையும் வெறும் சட்டியில் சிவக்க வறுத்து பவுடராக அரைத்து சர்க்கரை கலந்து நெய்யை நன்றாக சூடாக்கி லட்டாக உருட்டவும். தண்ணீரில் கரைத்து இளம் சூட்டில் வைத்து கிளறி நெய் சேர்த்து இறக்கினால் சத்தான களி சுவையான களி.

திருமதி. இராஜேஸ்வரி ரவிக்குமார்

சுகுணா இயற்கை உணவகம், எண்: 74 சி.கே.கே.எம். கார்டன், காருகுடி கிராமம், திருவாரூர் 613204

செல் : 9488574308

கால்நடை மூலிகை வைத்ய பயிற்சி கூட்டம்

15.05.2024 அன்று சிவகாசி அருகே உள்ள மெப்கோ பொறியியல் கல்லூரியில் ஒரு நாள் கால்நடை மூலிகை வைத்ய பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் கால்நடை வளர்ப்போர் குறிப்பாக பால்மாடு வளர்ப்போர் மீசலூர், மத்தியசேனை, வடமலாபுரம், ஓடைப்பட்டி, காரிசெரி கிராமங்களிலிருந்து 50 நபர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் பயிற்றுணர்களாக திரு. விவேகானந்தன், திருமதி. சங்கீதா, மருத்துவர் முனிசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கல்லூரியில் மாடுகளின் பாலை பரிசோதிக்கும் ஒரு கருவியின் மூலம் மடி நோய் வந்துள்ளதா என்பதைக் கண்டறியும் செயல் விளக்கம் காட்டப்பட்டது.

அதனை தொடர்ந்து மூலிகை மசாலா உருண்டை, மத்தான் தைலம், மடிநோய் களிம்பு போன்றவை செயல் முறை விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது. இக்கருத்தரங்கில் கூறப்பட்ட சில உத்திகள் பின்வருமாறு:

தேங்காய் எண்ணெயில் மெழுகுவர்த்தியை உதிர்த்துப் போட்டு நெருப்பில் சூடு செய்து மடுவில் தடவ வேண்டும். மருத்துவர் முனியசாமி மடிநோய்க்கு கூறிய வைத்ய முறை: 200 கிராம் படிகாரம் மாட்டிற்கு உள்ளே கொடுக்க வேண்டும். 200 கிராம் கீழாநெல்லியை அரைத்தும் கொடுக்கலாம். எலுமிச்சைப்பழம் 4 உள்ளே கொடுக்க வேண்டும்.

வயிறு உப்பிசத்திற்கு பூண்டு, இஞ்சி 20 கிராம், வெல்லம் 10 கிராம், வெற்றிலை சிறிது, கல் உப்பு சேர்த்து உள்ளே கொடுக்க வேண்டும் என்று மருத்துவர் முனியசாமி கூறினார். இதனைத் தொடர்ந்து கால்நடைகளுக்கு மடி நோய் வருவதை முன்னரே கண்டுபிடிக்கும் முறை பற்றி மெப்கோ பொறியியல் கல்லூரி பேராசிரியர்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சினைபருவத்தில் மாடு கீழேவிழுந்து எழுந்திருக்க வில்லையெனில்

(கால்சியம்சத்து குறைவு)

திரு. அருண்பழனியம்மாள் என்பவரின் மாடு 8 மாத சினைபருவத்தில் திடீரென கீழே படுத்த மாடு எழுந்திருக்க முடியவில்லை என்று Injection, Trip ஊசி, குளுக்கோஸ் என்று ஒரு வாரம் சிகிச்சை செய்துள்ளார்கள். பின் என்னிடம் வந்தார்கள். நான் மூன்று நாட்கள், கருவேப்பிலை, முருங்கைக்கீரை, சுண்ணாம்புக்கீரை ஒரு கைப்பிடி அளவு 2 வேளை கொடுக்கச் சொன்னேன். மாடு எழுந்திருக்க வில்லை. கல்உப்பு ஒரு கைப்பிடி கொடுக்க சொன்னேன். மாடு எழுந்து பின் விழுந்து விட்டது. அதன்பின் பிரண்டை, முருங்கை, தழுதாழை, கருவேப்பிலை ஒரு கைப்பிடி அளவு கொடுத்தேன். 2 கோழி முட்டை 2 வேளை 3 நாட்கள் கொடுக்கப்பட்டது. வாத எண்ணெய் தேய்த்துவிட பின் மாடு எழுந்துவிட்டது. தற்சமயம் கன்றுக்குட்டி ஈன்று 5 தினங்கள் ஆகிவிட்டன.

செல்வி, சொர்ணக்காடு , பேராவூரணி தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம் –614804. செல் : 6369221412

வெளி மாநில உத்திகள்

மாமரம் நன்கு பூ எடுக்க

குஜராத் மாநில வல்சாட் மாவட்டம், ஜயாபூர் தாலுகா, அட்கம் கிராமத்தில் கேட்டன்பாய் என்ற விவசாயி மாமரத்தோப்பில் நிலத்தின் மேல் காய்ந்த சருகுகளைக் கொண்டு மூடாக்கு போட்டுள்ளார். இவர் மாமரம் பூ பூக்கும் முன்னர் சாணியுடன் வேப்பஇலை, மாஇலை, யூகலிப்டஸ் என்ற தைல மர இலைகளைப் பிசைந்து தயாரிக்கப்பட்ட எருவரட்டி மூலம் ஒரு நாளைக்கு 2 முறை தோப்பில் புகை மூட்டம் போடுகிறார். இதனால் நன்கு பூ எடுப்பதாகக் கூறுகிறார்.

நன்றி : தேனீ – 35101

மாடுகள் பருவத்திற்கு வர

கிடரி மாடு வயது எட்டியிருந்தாலும் பருவத்திற்கு வரும் அறிகுறி காட்டாமலிருக்கும். இதற்கு இலுப்பை மர பூக்கள் நித்தம் 1/2 கிலோ தின்னக் கொடுக்கிறார். இத்துடன் கொண்டக்கடலையும் சுமார் 100 கிராம் (ஊறப் போட்டது) சேர்த்துக் கொள்கிறார். இதனால் மாடு விரும்பி சாப்பிடும். இந்த முறையை பல தலை முறைகளாக பாரத்சிங்கின் குடும்பத்தில் பின்பற்றப்படுவதாகக் கூறப்படுகிறது.

பாரத்சிங் பிக்பாய் சௌகான், விம்டி, தஹோட் மாவட்டம், குஜராத்.

நன்றி : தேனீ – 35102

பயிர்களை பாதுகாக்க மூலிகைப்பூச்சிக்கொல்லி

கசக்கும் தாவரங்களான நெய்வேலி காட்டாமணக்கு, எருக்கு, வேம்பு, ஊமத்தை, சீத்தாப்பழமர இலை இவைகளை வகைக்கு 2 இலைகள் எடுத்து 20 லிட்டர் கோமியத்தில் 21 நாட்கள் புளிக்கவிடுகிறார். இதனை பின்னர் வடிகட்டி 500 மி.லி. கரைசலை 15 லிட்டர் நீரில் கலந்து பயிர்களுக்குத் தெளிக்க வேண்டும். என கேட்டன்பாய் கூறுகிறார்.

போபத்பாய் மகன் பாய்படேல் தான் பயிரிடும் கத்தரிக்காய் பயிரில் பூச்சித்தாக்குதலைக் கட்டுப்படுத்த சிவப்பு நிறத்தில் பூக்கும். அரளி மர இலைகள் 2 கிலோ எடுத்து நறுக்கி மாட்டுக்கோமியம் மூழ்குமாறு செய்து ஒரு வாரம் வைத்துவிடுகிறார். பின்னர் இதனை வடிகட்டிய 500 மி.லி கரைசலுடன் 15 லிட்டர் நீரில் கலந்து தெளிப்பதால் காய்த்துளைப்பான் போன்ற பூச்சிகள் கட்டுப்படுவதாகக் கூறுகிறார்.

மாமரம் கன்றுகள் நடவு செய்யும் சமயம் 2 அடிகுழி எடுத்து அதில் எருக்கு 1/2 கிலோ, ஆமணக்கு தழை 100 கிராம், சுண்ணாம்பு தூள் 50 கிராம் துவி விடுவதால் கரையான் அழுகல் நோய் உண்டாகாது என கன்ஜிபாய் ராகவ்பாய் கூறுகிறார்.

இயற்கை வழி உத்திகள்

தர்மேந்திரபாய் பட்டேல் (லட்சுமிபுரா, சபர்கந்தாமாவட்டம்) நிலக்கடலை, உளுந்து, வெந்தயம் பயிர் செய்கிறார். இவர் ஜீவாமிருதக் கரைசல் தயார் செய்து ஓர் ஆண்டு வைத்து பின் பயிருக்கு பத்து மடங்கு நீர் சேர்த்து தெளிக்கிறார். இவர் பசுமாட்டு கோமியம் 500 மி.லியுடன் மோர் 250 மி.லி. சேர்த்து 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கிறார். இதனால் சாறு உறிஞ்சும் பூச்சிகள் கட்டுப்படும். இரண்டாவது முறை தெளிக்கும் சமயம் 250 மி.லி. கோமியம், மோர் 500 மி.லி. என்ற அளவில் சேர்த்து 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கிறார். இந்த மாதிரி அளவுகளை மாற்றித் தெளிப்பதால் மண்ணின் சத்துக்கள் சம அளவு என்ற விகிதத்தில் இருக்கும் எனக் கூறுகிறார்.

கன்ஜிபாய் என்பவர் சாணியுடன் பால், கோமியம் எருக்கம்பால் சேர்த்து இதில் விதைகளை சில நிமிடங்கள் வைத்து விதை நேர்த்தி செய்கிறார். பின் விதைப்பதால் விதைகள் நோய்களிலிருந்து பாதுகாக்கப்படும் எனக் கூறுகிறார். இவர் பயிர் வளர்ச்சி கூட்ட ஒரு லிட்டர் மோரை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கிறார்.

கிரீத்பென் (பித்தா, வல்சாட் மாவட்டம்) வெல்லம் 1/4 கிலோவை மோர் 2 லிட்டரில் கலந்து பின்னர் 15 லிட்டர் நீரில் சேர்த்து தெளிப்பதால் மிளகாய், சுரைக்காயில் புழு தாக்குதல், நோய்தாக்குதல் கட்டுப்படும் எனக் கூறுகிறார். தேனீ – 35104

குப்பை தூவும் இயந்திரம்



டிராக்டரில் பி.டி.ஓ. சாப்ட் உதவியுடன் இக்கருவி இயங்குகிறது. இந்த அமைப்பை லேட்அஸ்கில்பாய் கானி என்ற விவசாயி உருவாக்கியிருந்தார். இவரது குமாரர் சமீர் கிரீன்லேட் என்ற கம்பெனியை உருவாக்கி இந்த கருவிகளை 300க்கு மேல் விற்றுள்ளார். இதன் விலை தலா ரூ. 6.5 லட்சம். இதை இயக்குவதற்கு 40 ஹெச்பி திறன் அல்லது அதற்கு மேற்கொண்ட திறன் உள்ள டிராக்டர்களைப் பயன்படுத்தி குப்பைகளை நிலத்தில் தூவிவிடலாம். டிராக்டருடன் டிராலியை இணைத்து இதில் 3–4 டன்கள் (டிராலியின் பிடிக்கும் அளவு) எடையுள்ள குப்பையை நிரப்பி பின்னர் தூவி விடலாம். காய்ந்த அல்லது ஈரமான குப்பை எதுவானாலும் இதன்மூலம் விசிறி வீசி விடலாம். ஓர் ஏக்கருக்கு 10 கூலியாட்கள் கொண்டு 8 மணி நேரத்தில் தூவிவிடும் வேலையை இந்தக் கருவியின் மூலம் ஓர் ஆள் (டிரைவர்) கொண்டு 1/2 மணி நேரத்தில் செய்து முடிக்கலாம். இந்த கருவிகள் உற்பத்தி செய்ய தேவைப்படும். முதலீட்டு பணத்திற்குத் அஹமதாபத்திலுள்ள கியான் என்ற அமைப்பு உதவி செய்தது.

நன்றி : தேனீ – ஜனவரி – மார்ச் 2024

ஜடாயு கழுகு இனம் அழிவதைத் தடுக்க

தமிழ்நாடு கர்நாடகா எல்லையில் பந்திப்பூர் என்ற இடத்தில் பறவைகள் மற்றும் விலங்குகள் சரணாலயம் ஒன்று அமைந்துள்ளது. இதில் எண்ணற்ற பறவைகள் மற்றும் விலங்குகள் வசித்து வருகின்றன. இங்கு ஜடாயு என்ற கழுகு இனம் சில வருடங்களுக்கு முன்பு எண்ணிலடங்கா அளவுக்கு வாழ்ந்தன. அந்த பறவைகள் தற்பொழுது 99 சதவீதம் அழிந்து விட்டன. தற்பொழுது ஒரு சதவீதம் மட்டுமே வனத்தில் உள்ளன. இந்த பறவை இனங்களின் அழிவிற்கு காரணம் என்ன என்பதனை கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூர் வட்டத்தில் இயங்கி வரும் அருளகம் என்ற அரசு சாராத நிறுவனம் ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டு வருகிறது. இந்த நிறுவனத்தின் உரிமையாளர் திரு. பாரதிதாசன் சுப்பையா என்பவர் இந்த பறவை இனங்களை மீட்டு எடுக்க பல வழிகளில் முயன்று வருகிறார்.

இந்த பறவை இனங்கள் அழிய கண்டறியப்பட்ட காரணங்களில் ஒன்று வனப்பகுதியில் வாழும் மக்கள் பாலிற்காகவும், இறைச்சிக்காகவும், கால்நடைகள் அதிகம் வைத்துள்ளனர். இவர்கள் தங்களின் கால்நடைகளுக்கு நோய் எதிர்ப்பு திறன் அதிகரிக்க ரசாயனம் கலந்த மருந்துகளை அதிகம் செலுத்துகின்றனர்.

இவர்களின் கால்நடைகள் இறைச்சிக்காக விற்கப்படும் பொழுது வியாபாரிகள் இறைச்சி போக பயன்படாத மாமிச பாகங்களை வனப்பகுதிகளில் உள்ள ஓடைகளில் போட்டு விடுகின்றனர். மேலும் உடல் நலக்குறைவால் இறக்கும் கால்நடைகளையும் வனப்பகுதிகளில் விலங்குகளுக்கு இரையாக போட்டு விடுகின்றனர். இதனால் இந்த இறந்த கால்நடைகளை உட்கொள்ளும் கழுகு இனங்கள் இந்த கால்நடைகள் மேல் செலுத்தப்பட்ட இரசாயன மருந்து கலந்த மாமிசத்தை உட்கொள்ளுவதால் குறுகிய காலத்திலேயே இறப்பை சந்திக்கின்றன. இங்கு கால்நடை வளர்ப்போரிடம் இயற்கை வழியில் கால்நடை மூலிகை வைத்ய பயிற்சி ஒன்றை குமரகுரு வேளாண்மை நிறுவனம் மே மாதத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இதில் நானும் உதயகுமாரியும் பயிற்றுநராக கலந்து கொண்டோம்.

சங்கீதா, விச்சூர்,மணமேல்குடி தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம். செல் : 8508437148

காய்கறிகளை விற்கும் தள்ளுவண்டிக் காரர்களுக்கு உதவிடும் புதிய உத்தி

ஹைதராபாத்திலுள்ள உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவிகளான தேஜஸ்வி மற்றும் பிரக்கனஸ்ரீ மாணவிகள் குழு தள்ளுவண்டியில் காய்கறிகளை விற்பனை செய்யும் நபர்களுக்கு உதவிடும் உத்தியை உருவாக்கியுள்ளனர்.

பொதுவாக தள்ளுவண்டியில் விற்கப்படும் காய்கறிகள் அதிக வெயில், காற்றுப்படுவதால் இரண்டு நாட்களில் வாடிவதங்கி விற்பனைக்கு தகுதியற்றதாகிவிடும். மரத்திலான தள்ளுவண்டிகளில் விற்பனை செய்தால்

தள்ளுவதற்கு கடினமாகி மூட்டுவலி ஏற்பட வழிவகுக்கும்.

மின்சார வண்டி தயார்செய்து இயக்கினால் இது அவ்வப்போது சார்ஜ் செய்வதற்க்கு தட்டுப்பாடும் விலையும் அதிகமாகவும் இருக்கும். இதற்கு மாற்று வழியாக சூரிய ஒளி மூலம் இயங்கும் தள்ளுவண்டி உருவாக்கியுள்ளனர். இதில் காய்கறிகளை உலர வைக்கலாம் மற்றும் கெட்டுப்போன காய்கறிகளை கம்போஸ்ட்டுகளாக மாற்றலாம். சாதாரணமாக சுற்றுச்சூழல் 32 டிகிரி செல்சியஸ்க்கும் 73 சதவீதம் ஈரப்பதம் உள்ள சுற்றுச் சூழலில் இந்த தள்ளுவண்டியில் குளிர்சாதன வசதி மூலம் 25 டிகிரி மற்றும் 91 சதவீதம் ஈரப்பதம் உள்ள சூழலை ஏற்படுத்த முடியும். இதனால் காய்கறிகளை கெடாமல் பாதுகாக்கவும் விற்பனையைக் கூட்டவும் முடியும். இவர் தெலுங்கனா மாநிலம் ஸ்ட்டார்ட்அப் போட்டியில் தேர்வு செய்யப்பட்டு இந்த தள்ளுவண்டியை மேன்மைப்படுத்த நிதி பெற்றுள்ளனர்.

நன்றி : தேனீ: ஜனவரி – மார்ச் 2024

பாட்டிலில் / கேனில் அடைக்கப்பட்டு விற்கப்படாத நீர் அவ்வளவு ஆபத்தானதா?

பாட்டிலில் அடைக்கப்பட்ட எல்லா நீரும் பாதுகாப்பானது என்றும் சொல்ல முடியாது. முறையாக ஆய்வு செய்துதான் சொல்ல முடியும். முறையாக சேகரிக்கப்பட்ட மழைநீர், ஊருணிநீரை சுடவைத்து குடித்தாலே பாதுகாப்பானதுதான். அரசு விநியோகிக்கும் குடிநீரும் மிகவும் பாதுகாப்பானதே. ஒருசில இடங்களில் குழாய்களில் ஏற்படும் விரிசல்களால் மாசுபடும் குடிநீரை வைத்து, ஒட்டுமொத்த குடிநீரையும் புறம்தள்ளுவது சரியானது அல்ல.

ஆர்.ஓ வடிகட்டி ஒரு நல்ல வடிகட்டி முறையா?

ஆற்றுப்படுகைகளில், ஊருணிகளில் , கிணறுகளில் தண்ணீர் கிடைக்காத போது அரசாங்கத்தால் குடிநீர் விநியோகம் செய்ய முடியாதபோது மக்கள் ஆழ்துளைக் கிணறுகளை நம்பி இருக்கும் சூழல் ஏற்படுகிறது. ஆழ்துளை கிணற்றின் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க கிடைக்கும் நீரில் கரைந்துள்ள உப்பின் அளவும் அதிகரிக்கிறது. இது குடிக்க ஏற்றதாக அமைவதில்லை. அப்படியான சூழலில் இந்த நீரிலிருந்து உப்பற்ற நீரை வடிகட்டி எடுக்க ஆர்.ஓ வடிகட்டி முறை பயன்படுத்தப்படுகிறது. ஆனால் ஆர்.ஓ வடிகட்டி முறை செயல்படும் முறையை அறிந்தால் அதில் உள்ள ஆபத்து விளங்கும்.

ஒரு பத்து லிட்டர் தண்ணீரில் பத்து கரண்டி உப்பு கரைந்துள்ளது என்று வைத்துக்கொள்ளலாம். இப்போது இந்த பத்து லிட்டர் தண்ணீரில் இருந்து உப்பில்லாத 3 லிட்டர் தண்ணீரை ஆர்.ஓ வடிகட்டி மூலம் பிரித்து எடுத்து விட்டால் என்ன ஆகும். மீதமுள்ள 7 லிட்டர் தண்ணீரில் 10 கரண்டி உப்பு இருக்கும். இப்போது இந்த 7 லிட்டரில் உப்பின் தன்மை மிக அதிகமாக இருக்கும். மீண்டும் இந்த நீரிலிருந்து ஆர்.ஓ முறை மூலம் 2 லிட்டர் உப்பில்லாத நீரை எடுத்தால் , மீதமுள்ள 5 லிட்டர் தண்ணீரில் 10 கரண்டி உப்பு இருக்கும். இப்போது மேலும் தண்ணீர் உப்பாக மாறும். இது தொடரும் பட்சத்தில் ஒரு கட்டத்தில் தண்ணீரில் உள்ள உப்பின் அளவு ஆர்.ஓ வடிகட்டியை செயலிழக்கும் அளவிற்கு சென்றுவிடும். ஆகையால் ஆர்.ஓ. வடிகட்டி முறையை ஊக்குவிக்காது மழைநீர் சேமிப்பு, கூரைநீரை குடிநீராக்கும் திட்டம், ஊருணி பாதுகாப்பு ஆகியவற்றில் அக்கறை கொள்வதும் சரியான வடிகட்டி முறையை தேர்வு செய்வதுமே சிறந்த நிரந்தர தீர்வுகளாக அமையும்.

கூரைநீரே குடிநீராய்



நம் வீட்டுக் கூரைசகளில் விழும் மழைநீரை சேகரித்து குடிக்கப் பயன்படுத்தலாமா?

தாராளமாகப் பயன்படுத்தலாம். காரணம் நமக்கு கிடைக்கும் குடிநீர் ஆதாரங்களில் மழைநீரே குறைந்த மாசுபாடு உடையது. ஆகையால் அதனை சேகரித்து முறையாக வடிகட்டி குடிநீராய் பயன்படுத்தலாம்.

கூரையில் விழும் மழைநீரை முறையாக சேகரிப்பது எப்படி?

மழைக்காலத்திற்கு முன்பாக நம் வீட்டுக் கூரைகளை முறையாக சுத்தம் செய்து வருவது சிறந்தது. வீட்டுக் கூரையின் வாட்டத்திற்கு ஏற்றார்போல குழாய்களை அமைத்து சேகரிக்கலாம். குழாய்களின் அளவு அந்தந்தப் பகுதியில் பெய்யும் மழையின் அளவையும் கூரையின் அளவையும் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. ஒரே குழாய் வழியாக மழைநீர் வடியுமாறு கூரையின் வாட்டம் அமைக்கப்பட்டால் சேகரிப்பு குழாய்க்கான செலவு குறையும். ஒரு வேளை வெவ்வேறு வாட்டங்களில் அல்லது திசைகளில் கூரையில் விழும் நீர் வழிந்தோடினால் அவற்றை சேகரித்து ஒருங்கிணைப்பது அவசியமாகிறது.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட நீரை வடிகட்ட வேண்டுமா?

ஆம் வடிகட்ட வேண்டும். முதல் 5 நிமிடங்கள் வடியும் கூரைநீர் அழுக்காக இருப்பதால் அதை உறிஞ்சு குழிக்குள் வடித்து விடலாம். அதன்பின் வடியும் சுத்தமான குடிநீரை உயிர்ம மணல் வடிகட்டியின் மூலம் வடிகட்டி பாதுகாப்பான தொட்டியில் சேமிக்கலாம். தொட்டி நிரம்பிய பின் வெளியேறும் உபரி நீரை உறிஞ்சல் குழியினுள் செலுத்தலாம். வீட்டில் கிணறு இருப்பின் அதிலும் இணைக்கலாம்.

சேகரிக்கப்பட்ட நீரை எவ்வாறு சேமிக்கலாம்?

குழாய் வழியாக சேகரிக்கப்பட்ட நீரை வகையான தொட்டிகளில் சேமிக்க முடியும். இடவசதி, வீட்டின் தன்மை. கட்டுமானத்திற்கான முதலீடு, கிடைக்கும் கட்டுமான பொருட்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் சேமிப்புத் தொட்டியை தீர்மானிக்கலாம்.

நன்றி : நமது மண்வாசம், ஜூன் 2024

கவுணியில் புது இரகம்

நான் பல வருடங்களாக கவுணி நெல் சாகுபடி செய்து வருகிறேன். கவுணி நெல் சாயும் தன்மையுடையது. விளைச்சல் சுமார் 20 மூடைகள் (1ஏக்கர்) கிடைக்கும். சாயாத கவுணி நெல் இரகத்தை தேர்வு செய்து பயிரிட்டு வருகிறேன். இதனை 135 நாட்களில் அறுவடை செய்யலாம். மகசூல் 20–25 மூடைகள் வரை கிடைக்கும். இந்த அரிசியை மாவாக்கினால் பசை போன்று ஒட்டும் குணம் இருக்காது.

ஆர்.எம். தர்மராஜன், 5/32, பி.டி.ஆர் இல்லம், அயிலபேட்டை, கோப்பு அஞ்சல், திருச்சி, செல் : 9626175252

மாட்டிற்கு பாரம்பரிய இனப்பெருக்கம் செய்யும் செறுவா விடுதி பாலசுந்தரத்தின் உத்திகள்

இனப்பெருக்க முறையில் நிபுணத்துவம்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், செறுவா விடுதி கிராமத்தில் வசிக்கும் திரு. பாலசுந்தரம் கடந்த 30 ஆண்டுகளாகப் பாரம்பரிய வழியில் பசுக்களுக்கு இனப்பெருக்கம் செய்து வருகிறார். இவர் மாடுகளுக்கு சினை வைத்தியம் செய்வதிலும் வல்லவர். இவர் இத்தொழிலை கீரமங்கலத்தில் வாழ்ந்த பெரியப்பா கணேச அய்யரிடம் கற்றுக் கொண்டார். கணேச அய்யர் நல்ல மாட்டு வைத்தியரும் கூட. அவர் காங்கேயம் பொலி காளைகளைத் தருவித்து இப்பகுதியில் ஏராளமான நாட்டுப் பசு மற்றும் காளைகளை 1940 லிருந்து உருவாக்கி வந்தார். இவர் பத்தாண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இவரிடமிருந்து மாடு இனப்பெருக்கதிலும் சினை வைத்தியத்திலும் உள்ள நுட்பங்களை பாலசுந்தரம் சிறு வயது முதல் கற்றுக் கொண்டு நிபுணத்துவம் பெற்று விட்டார். இன்று இவருக்கு 50 வயதாகிவிட்டது. இவர் கூடவே கிராமத்துப் புரோகிதராகவும், கோவில் அர்ச்சகராகவும், விவசாயியாகவும் செயல்பட்டாலும் மாடு இனப்பெருக்கம் இவருக்கு முக்கியத் தொழில் இந்த கிராமத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் அரசாங்க கால்நடை மருத்துவசாலையில் மாடு சினை பெற 15 ரூபாய் செலவில் ஊசி போடப்பட்டாலும் கூட, சுற்றுப்புற விவசாயிகள் பாரம்பரிய முறையில் காளை போட இவரிடம் தான் வருகின்றனர். இதற்கு இவர் 50 ரூபாய் வசூலிக்கிறார், சினை ஊசியை விட இவரின் இயற்கை முறையில் மாடு சினைப்படுவத உறுதி.

காங்கேயக் காளையிலிருந்து ஜெர்சிக்கு மாறுதல்

பால சுந்திரம் முதலில் காங்கேயம் காளையைத்தான் சினைக்குப் பயன்படுத்தி வந்தார். டிராக்டர்கள் கிராமங்களில் பெருகியபோது உழவு மாடுகளின் தேவை குறைந்தது. காங்கேயம் காளைகள் விவசாய வேலைகளுக்குப் பெருத்தமானவை. உழவாட்களும் உழவு மாடுகளும் விரும்பப்படாத சூழ்நிலையில் விவசாயிகள் கறவை மாடுகளைப் பெரிதும் விரும்புகின்றனர். கறவைப் பசுக்களுக்கு காங்கேயத்தைவிட மக்கள் முதலில் சிந்தி ரகத்தை விரும்பினர். இப்போது ஜெர்சியை விரும்புகின்றனர்.

இதை அனுசரித்து பாலசுந்தரம் காங்கேயம் காளையை விற்றுவிட்டுச் சில ஆண்டுகள் சிந்திக் காளையைப் பயன்படுத்தினார். இப்போது ஜெர்சியைப் பயன்படுத்துகிறார்.

மாடு சினையாகாமல் இருந்தால்

கிடாரிக் கன்று பருவத்திற்கு வந்தும் சினைப்படாவிட்டால் 200 கிராம் கொண்டைக் கடலையை 12 மணிநேரம் ஊறப்போட்டு நீரை வடித்து விட்டு முளைகட்டிய பிறகு முளைக்க வைத்த கொண்டைக்கடலையை ஒரு வாரம் தொடர்ந்து கொடுத்துவிட்டுக் கூடவே யானை நெருஞ்சி இலை, காய் இரண்டையும் கலந்து இடித்து அரை லிட்டர் கொழ கொழப்புள்ள சாறாக கிடாரிக்குத் தர வேண்டும். (நீர் விடக் கூடாது). மூன்று நாட்கள் ஒரே வேளை தர வேண்டும். ஒரு வாரம் மருந்து கொடுத்த பின்பு ஈத்து அடிக்கும். இவ்வாறு ஈத்து அடித்தபின்பு காளை போட்டால் கிடாரி சினையாகும். கொண்டைக் கடலைக்கு பதில் கொள்ளுப் பயிரை (கானப்பயறு) யும் முளைக்கட்டி வழங்கலாம். ஈத்துவரும் வரை கிடாரிக்கு பசும்புல் தாராளமாக வழங்க வேண்டும். இந்த முறையில் பல நூற்றுக்கணக்கான மாடுகளுக்கு பாலசுந்தரம் சினைப்படுத்தியுள்ளார்.

நஞ்சுக்கொடி விழ

மாடு கன்று போட்டதும் மஞ்சள் 50 கிராம், நெல் 200 கிராம், பச்சரிசி 200 கிராம், கருப்பட்டி 200 கிராம் இடித்துக் கொடுக்க வேண்டும். இது போன்று செய்து நஞ்சுக்கொடி விழவில்லையென்றால் 3 படி மூங்கில் இலைகளை இடித்து வழங்கலாம். அப்படியும் விழவில்லையென்றால் ஒரு முழு சுரைக்காயைத் துண்டு செய்து ஊட்டவும். எக்காரணத்தைக் கொண்டு உள்ளுக்கள் கைவிட்டு எடுப்பது கூடாது. சுரைக்காய் வைத்தியத்திற்கு கடைசி பட்சமாகக் கொடுக்கும்போது நஞ்சு விழுந்துவிடும்.

பெருமருந்துக்கொடி என்ற ஈசுவர மூலிகை (தலைச்சுருளி) மூலம் நிவாரணம் அளித்தல்: பாலசுந்தரம் இருதலை முறைகளாக மாடுகளுக்கு வரும் பல நோய்களுக்கு (ஜுரம், பொருமல், உப்புசம்) பெருமருந்து இலையைப் பயன்படுத்துகிறார். வேருடன் இப்பச்சிலையைப் பிடுங்கி (3 கைப்பிடி அளவு) 15 கிராம் சுக்கு, 15 கிராம் அரிசித்திப்பிலி, 15 கிராம் ஓமம், 15 கிராம் மஞ்சள் ஆகியவற்றுடன் இடித்து 3 வேளைக்கு 3 உருண்டை தயார் செய்து கொள்ளலாம். காலை, மாலை, பின்னர் மறுநாள் காலை என்று 3 வேளை மருந்து தர வேண்டும். பெருமருந்து இலை விஷத்தை முறிக்கக் கூடியது. இம்மருந்து கொடுத்தால் அசை போடாத மாடு அசை போடும்.

கால்நடை மருத்துவர் : ஜே. பாலசுந்தரம்
கிருஷ்ணாபுரம், செறுவாவிடுதி அஞ்சல்
பட்டுக்கோட்டை வழி, தஞ்சாவூர் மாவட்டம் – 614 628
தகவல் : ஆர்.எஸ். நாராயணன்.
நம் வழி வேளாண்மை அக்டோபர் – டிசம்பர் – 1997

கேள்வி, பதில்

எங்களுடைய ஆட்டுக்குட்டி 4 மாதமாகிறது. சுறுசுறுப்பு இல்லாமல் தீனி நன்றாக எடுக்காமல் உள்ளது. இதற்கு என்ன வைத்யம்

நத்தம் விவசாயி, திண்டுக்கல் மாவட்டம்.

ஆசிரியர் பதில் : வெற்றிலை 4, மிளகு 10, சுக்கு 10 கிராம், உப்பு 5 கிராம் சேர்த்து அரைத்து உள்ளே தர வேண்டும். இதை 2 நாட்கள் தர வேண்டும்.

விவசாயி கேள்வி : இரண்டு வேளை கொடுத்த பின் சற்று பரவாயில்லை. இதற்கு பின் என்ன வைத்யம் செய்ய வேண்டும்.

ஆசிரியர் பதில் : மூலிகை மசாலா உருண்டை (சுமார் 40 கிராம்) தயார் செய்து ஒரு நாளைக்கு ஓர் உருண்டை 2 நாட்கள் தயார் செய்து தர வேண்டும்.

நத்தம் விவசாயி: கோழி ஒன்று குண்ணிக்கொண்டுள்ளது. வைத்யம் என்ன?

ஆசிரியர் பதில் : மூலிகை மசாலா உருண்டை தயார் செய்து 10 கிராம் அளவு ஒரு கோழிக்கு ஒரு வாரம் தீனியுடன் கலந்து கொடுக்க வேண்டும்.

வாசகர் வட்டம்

சௌராஷ்ட்ரா மக்களின் பாரம்பரிய பிரசவ லேகியம்

இந்தியாவில் கஜினிமுகம்மது படையெடுப்பின் சமயம் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னர் குஜராத்திலுள்ள சௌராஷ்டிர இன மக்கள் தமிழ்நாட்டில் மதுரை, தஞ்சாவூர் போன்ற இடங்களில் குடியமர்ந்தனர். இவர்களுடைய குடும்பங்களின் பாரம்பரியமாக தயாரிக்கப்படும் பிரசவ லேகியம் பிரபலமானது. இது மதுரை சௌராஷ்ட்ரா மக்களின் பெண்களின் பேறுகாலத்திற்குப் பிறகு தரப்படும் பாரம்பரிய அருமருந்தாகும். பிள்ளைப் பெற்ற பிறகு கர்ப்பையில் எஞ்சி இருக்கும் நச்சுக்களை

வெளியேற்ற இது பெரும் உதவி செய்கிறது. அது மட்டும் இல்லாமல் இது சிரிமான பிரச்சனைகளை தீர்க்க உதவுகிறது. இந்த மருந்தை **காஃரூபூர்கோ** என்று கூறுவர்.

தேவையான பொருட்கள்:

இவை அரைக்க வேண்டியபொருட்கள்: கருப்பட்டி 500 கிராம், சுக்கு 40 கிராம், அக்ரா 10, கிராம், ஓமம் 45 கிராம், சதக்குப்பை 40 கிராம், திப்பிலி 10 கிராம், அதிமதுரம் 10 கிராம், சித்தரத்தை 20 கிராம், மிளகு 10 கிராம் இது அரைத்தப் பிறகு உபயோகிக்க வேண்டிய பொருள் கசகசா 25 கிராம்.

செய்முறை : முதலில் சுக்கு அதிமதுரம் மற்றும் சித்தரத்தை துண்டுகளாக்கி வறுத்தெடுத்து ஆறிய பிறகு நன்கு தட்டி வைத்துக் கொள்ளவும். ஏனெனில் இவை கெட்டியானப் பொருட்கள் ஆகையால் மிக்ஸி ஜாரில் இட்டு அரைக்கும் போது பிளேடு உடைந்திட வாய்ப்புக்கள் இருக்கிறது. நன்கு தட்டி வைத்துக் கொண்டால் ஈசியாக மிக்ஸியில் இட்டு அரைத்து பொடியாக்கலாம். மிளகு, வால்மிளகு மற்றும் வெள்ளை மிளகு வறுத்து ஆறியபிறகு நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும்.

சதக்குப்பை மற்றும் ஓமத்தை நன்கு வறுத்து ஆறிய பிறகு பொடி ஆக்கிக் கொள்ளுங்கள்.

அக்ரா மற்றும் திப்பிலி தனித்தனியாக வறுத்து ஆற வைத்து பொடியாக்கிக் கொள்ளுங்கள். இப்போது கருப்பட்டியைத் நன்கு தட்டி மிக்ஸியில் கொஞ்சம் கொஞ்சமாக போட்டு நன்கு அரைத்து தூள் ஆக்கிக் கொள்ளுங்கள்.

இப்போது கருப்பட்டி மற்றும் மற்ற அனைத்தும் அரைத்து பொடியாக்கிப் பொருட்களையும் சேர்த்து நன்கு கலந்து விட்டு சிறிய சிறிய உருண்டைகளாக பிடிக்கவும். கருப்பட்டியில் ஈரப்பதம் இருப்பதால் உருண்டை பிடிக்க வரும். கசகசாவை வறுத்துக் கொள்ளவும்.

பிடித்த ஒவ்வொரு உருண்டையையும் கசகசாவில் உருட்டி எடுக்க காஃரு உருண்டை ரெடி ஆகிவிடும்.

இதை பிரசவம் ஆனப் பெண்கள் மட்டுமே சாப்பிட வேண்டும் என்று இல்லை. யாரும் ஒரு மருந்தாக சாப்பிடலாம். வாயு பித்தம் கபம் என எல்லாவற்றையும் தீர்க்கவல்லது. இது பெண் தாய் வீட்டில் பிரசவம் ஆனப் பிறகு 9 ம் நாள் தாய் மற்றும் சேய் சீயக்காய் வைத்து தேய்த்து தலைக்கு ஊற்றி குளிப்பாட்டி குழந்தை பெற்ற தாய்க்கு இந்த மருந்தை உணவிற்குப் பிறகு கொடுத்து சாப்பிட வைத்து சுடு தண்ணீர் குடிக்க வைப்பர். இந்த 9 ம் நாள் தீட்டு கழிக்கும் சடங்கு செய்வதற்கு முன்பே இந்த மருந்தை அப்பெண்ணின் தாய்வீட்டார் செய்து வைத்திடுவர். தினமும் இந்த மருந்தை சாப்பிட்டப் பிறகு தருவார்கள். அதனால் குழந்தை பெற்ற உடம்பு லேசாகவும் வயிறு உப்பாமலும் சிரிமானப் பிரச்சனை தடுக்கும் மருந்தாகவும் இருக்கும். இந்த உருண்டைகளை பெண் தன் தாய் வீட்டில் இருந்து புகுந்த வீட்டிற்குச் செல்லும் போது தாய் வீட்டில் செய்து கொடுத்து அனுப்பி வைப்பார்கள்.

வி.ஆர்.பாலாஜி, வில்லாபுரம், மதுரை–12.

கேள்வி, பதில்

மாடு சினைபிடிக்க

மாடு கிர் கிராஸ் காளைக்கு பத்து தடவை போட்டாச்சு, ஊசி ஆறு ஏழு தடவை போட்டாச்சு மாட்டுக்கு பல்லு நாலு இன்னும் சினை பிடிக்கவில்லை. மாடு வைத்திருப்போமா வித்துருவோமா என்று மனச்சங்கடமாக உள்ளது. ஒரு கன்றாவது ஈன்ற பிறகு விற்கலாம் என நினைக்கிறேன். சினை பிடிப்பதற்கு வழிவகை சொல்லவும். – நத்தம் விவசாயி

ஆசிரியர் பதில் :

மாட்டிற்கு தினமும் 2 மடல் சோற்றுக்கற்றாழை, கட்டி மஞ்சள் அல்லது விரலி மஞ்சள் தட்டி போட்டு தண்ணீரில் கலக்கி 3 நாளைக்கு உள்ளே கொடுக்க வேண்டும். 200 கிராம் சுண்டக்கடலையை ஊற வைக்க வேண்டும். மறு நாள் முளைகட்டிய சுண்ட கடலை ஆட்டி 15 நாட்களுக்கு தினமும் தண்ணீரில் கலக்கி உள்ளே கொடுக்க வேண்டும். மொடை அடித்த பின் அதாவது 48 மணி நேரத்திற்குள் சினைக்கு போட வேண்டும். சினை போடுவதற்கு முன் 100 மி.லி. வேப்ப எண்ணெய் வாய்க்குள் ஊற்றி விட வேண்டும். சினைக்கு போட்ட பின் 2 கைப்பிடி அளவு கருவேப்பிலை 3 நாட்கள் தொடர்ந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

காதில் சீழ் வடிந்து புண்ணு வந்தால்

காதில் புண் வந்தால் தும்பை எண்ணெய்ச்சாறு 1/4 லிட்டர், தேங்காய் எண்ணெயில் காய்ச்சும் போது பூண்டு, மஞ்சள் தட்டி போட்டு காய்ச்சி வடி கட்டி சுமார் 5 மிலி உள்ளே ஊற்ற வேண்டும். ஒரு நாளைக்கு 2 வேளை 2 நாளைக்கு ஊற்ற வேண்டும்.

மூக்கில் சளி வடிந்தால்

கண்டகத்தரி பழம் 1 அல்லது 2 எடுத்து பசு மாட்டு கோமியத்தில் ஊற வைத்து மறு நாள் காலையில் 4 அல்லது 5 சொட்டு மூக்கில் ஊற்ற வேண்டும்.

நாள்	இடம்	நிகழ்ச்சி நிரல்	தொடர்பு முகவரி
30.06.2024	கொண்டேகவுண்டன்பாளையம் (பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண். 38B, 38C நெகமத்திலிருந்து பஸ் எண். 38B, 38C,3A)	அடித்தள கண்டுபிடிப்புகள் மற்றும் பாரம்பரிய அறிவு கருத்தரங்கம்.	S.நந்தகுமார் கொண்டேகவுண்டன்பாளையம் பொள்ளாச்சி தாலுகா கோவை மாவட்டம். செல் : 8344330420 8531974433

நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்

	வருட சந்தா ரூபாய்	ஆயுள் சந்தா ரூபாய்
நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள்	200	2000
விவசாயிகள் / தனிநபர்கள்	150	1500
தனிப்பிரதி	30	----
15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250)	1500	----
+ (கொரியர் செலவு ரூ. 250)		

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா"
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , 2380943

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in